www.padippakam.com

மே 16 - 31, 02 ரூ.5

# நந்தன் வழி

மாதமிருமுறை

## தமிழின எதிர்ப்பில்

# சிங்கள ராணுவமும் இந்து ஏடும்!



படிப்பகம்

www.padippakam.com


ஒவ்வொரு தமிழனும் படிக்க வேண்டிய அரிய நூல்கள்

# மாணவர் புத்தகப் பண்ணை

## வெளியீட்டில், விற்பனையில்...

| | | விலை ரூ. |
|---|---|---|
| தமிழ்ச் சான்றோர் பேரவையின் தமிழ்வழிக் கல்விப் போராட்ட மலர் | தமிழுக்காக உயிர் துறக்கத் துணிந்த 102 போராளிகளின் படங்களுடன் | 15.00 |
| நெஞ்சின் அலைகள் | நா.அருணாசலம் | 25.00 |
| தமிழீழம் நாடும் அரசும் | சு.இராசரத்தினம் | 45.00 |
| காசி ஆனந்தன் கவிதைகள் | காசி ஆனந்தன் | 50.00 |
| தமிழனா ? தமிங்கிலனா ? | காசி ஆனந்தன் | 35.00 |
| நெற்றியில் ஓர் எரிமலை | பல்லவன் | 15.00 |
| சின்ன நதிகள் | பல்லவன் | 15.00 |
| காற்றும் கலைஞரும் | இளவேனில் | 40.00 |
| புயலுக்கு இசை வழங்கும் பேரியக்கம் | இளவேனில் | 30.00 |
| படிமக் கோடுகள் | கோ.திருஞானம் | 250.00 |
| உருவக் கோடுகள் | கோ.திருஞானம் | 250.00 |
| ஓவியக் கோடுகள் | கோ.திருஞானம் | 120.00 |
| Indus Script Dravidian | இரா.மதிவாணன் | 300.00 |
| திருக்குறள் (English Couplets) | யோகி சுத்தானந்த பாரதி | 50.00 |
| புஷ்பவனம் குப்புசாமியின் தமிழிசைப் பாடல்கள் – ஒலிநாடா (2) | | 70.00 |
| ஈழம்: தமிழரின் தாயகம் | டாக்டர். க.ப.அறவாணன் | 60.00 |
| அவ்வையார் அன்று முதல் இன்று வரை | டாக்டர் தாயம்மாள் அறவாணன் | 100.00 |
| நந்தன் பகுத்தறிவு மலர் | | 10.00 |
| நந்தன் புரட்சி மலர் | | 15.00 |

அஞ்சலில் பெற விரும்புவோர் ஒவ்வொரு நூலின் விலையுடனும் கூடுதலாக ரூ.12.00 அனுப்ப வேண்டும்.

தொடர்புக்கு:

**மாணவர் புத்தகப் பண்ணை**
26, ச.ப. சாலை, அடையாறு, சென்னை – 600 020.
**தொலைபேசி: 4919353, 4911358**

(காசோலை, பணவிடை அனுப்பும்போது **நா.அருணாசலம்** என்ற பெயரில் அனுப்பவும்)


படிப்பகம்

www.padippakam.com


# நந்தன்

உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் ஏடு

ஆசிரியர்:
**நா.அருணாசலம்**

6 – 2

பெரியார் ஆண்டு 123
திருவள்ளுவர் ஆண்டு 2033
மே 16–31, 2002

மாணவர் மறுதோன்றி அச்சகம், 4, அபெக்ஸ் சேம்பர்ஸ், சௌந்திர பாண்டியன் அங்காடி (பாண்டி பஜார்), சென்னை–17 இல் அச்சிட்டு 218, அண்ணா சாலை, சென்னை–6 என்ற முகவரியிலிருந்து வெளியிடுபவர், உரிமையாளர்: நா.அருணாசலம்.

நந்தன் வழி
அம்பாள் மாளிகை,
218, அண்ணா சாலை,
சென்னை–6.
தொலைநகல் (ஃபேக்ஸ்): 859 1809


*காந்தி
சமூகத்தாரின்
நலனுக்காக
மனுதர்மப்படி
கொல்லப்பட்டாரே
ஒழிய அவர்
பொதுமக்களுக்கு
எந்தவிதமான
தவறான காரியம்
செய்ததற்காகவும்
கொல்லப்படவில்லை*

*- தந்தை பெரியார்*





மானமும் அறிவும்
மனிதர்க்கு அழகு
**- தந்தை பெரியார்**

# புரட்சியைத் தூண்டுகிறார்கள்!

*வீடு இருப்பது மனிதனுக்குப் பாதுகாப்பானது என்கிற நிலைமாறி வீடுகளில் இருப்பது ஆபத்தானது என்கிற அச்சம் மேலோங்கி இருக்கிறது.*

*ஒவ்வொரு நாளும் எங்காவது சில வீடுகளில் கொள்ளையடிக்கப் படுகின்றன.*

*வீடுகளில்தான் தூக்கமற்ற ராத்திரிகள் என்றால், பயணங்களும் பயங்கர அனுபவங்களாகின்றன. பேருந்துகள் வழிமறித்து நகைகள் பணங்கள் பிடுங்கப்படுகின்றன.*

*ரயில்களிலும் கொள்ளையரின் தாக்குதல்கள்.*

*தமிழக அரசோ இதுபற்றி வாய்திறக்க மறுக்கிறது.*

*கடந்த காலங்களில் நடந்த கொள்ளை, கொலைகளை விட இந்த ஆட்சியில் அதிகமாகி விடவில்லை என்று காவல்துறைத் தலைவர் பெருமைப்பட்டுக் கொள்கிறார்.*

*முதல்வரின் மவுனம் அவர் கோபக்காரர் அல்ல; சாந்த சொரூபி என்பதைக் காட்டுவதற்குப் போதுமானதாக இருக்கலாம்.*

*காவல்துறையின் ஒப்பீட்டுக் கணக்கு, புள்ளிவிவரங்களுக்குச் சில பக்கங்களை வழங்கலாம்.*

*மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு ஏது?*

*இதற்கு என்ன வழி? ஆட்சி மாற்றமா?*

*தனிச் சொத்துரிமையைப் பேணிப்பேணி வளர்த்த ஒரு சமூகம் தனக்கே பாதுகாப்பற்றுப் போய் விடுகிறது. இது தவிர்க்க முடியாதது.*

*இன்றையத் தேவை ஆட்சி மாற்றமல்ல; அடிப்படை மாற்றம்.*

*கொடி மாற்றமல்ல; கொள்கை மாற்றம்.*

*தத்துவ விளக்கங்களும் சரித்திரச் சான்றுகளும் ஓய்வாக உட்கார்ந்து நியாய தர்மங்களை அலசிப் பார்க்க வாய்ப்பாக இருக்கலாம்.*

*எதிர்காலம் குறித்துத் திட்டமிடுவது இருக்கட்டும். இன்றையப் பொழுது நிம்மதியாகப் போவது எப்படி என்று பொது மக்கள் விழி பிதுங்கி நிற்கிறார்கள்.*

*வழி?*

*ஆட்சியோ, அரசியல் கட்சிகளோ எங்களைப் பாதுகாக்காது; எங்களைப் பாதுகாக்க எங்களுக்குத் தெரியும் என்று மக்கள் முடிவு செய்து விட்டால் -*

*அதற்குப் பெயர்தான், புரட்சி.*

*பிரான்சு கற்றுத் தந்த பாடம்.*

படிப்பகம்

www.padippakam.com



# நெஞ்சின் அலைகள்

## ஆனாரூனா

# நிலத்தை மறந்த திராட்சைக் கொடிகள்

அரசியலில் நிரந்தர நண்பர்களும் கிடையாது நிரந்தரப் பகைவர்களும் கிடையாது என்பது ஓர் அரசியல் சூத்திரம்.

இதை உச்சிரிக்க வாய்ப்பில்லாத அரசியல்வாதி, இதைச் சந்தர்ப்ப வாதம் என்று விமர்சிப்பார்.

இந்த விமர்சகர் தனது எதிரியுடன் நட்புக் கொள்ள நேரிடும்போது பகைமை வளர்வது பண்பாடல்ல என்று அறநெறியாளரின் 'விசால' இதயத்தைக் காட்டுகிறார். இது அறநெறியல்ல; அழிவு நெறி என்று குமுறும் தன் கட்சிக்காரர்களிடம் "காரியம் பெரிதா? - வீரியம் பெரிதா?" என்று கேட்கிறார்.

குமுறல் அடங்கிவிடுகிறது. அப்போது புதிய சிந்தனையும் தோன்றுகிறது. "ஒரு கணக்குக்கு ஒரு விடைதான் இருக்க முடியும். ஆனால், ஒரு விடைக்கு ஒரே வழிமுறைதான் உண்டென்பது தப்புக் கணக்காகிவிடும்" என்கிறது புதிய சிந்தனை.

இந்த ஞானம் வந்ததும் "களத்திலே வெற்றிதான் முக்கியம்; கையிலெடுத்தது வாளா, வெடிகுண்டா என்பதல்ல" என்று சமாதானம் கிடைக்கிறது.

உத்தரப் பிரதேசத்தில் மாயாவதி இவ்வாறு சமாதானம் கொள்ளும்போது, மாயாவதியின் முக்கிய எதிரிக்கும் இதே சமாதானம் கிடைக்கிறது.

பகுஜன் சமாஜ் கட்சிக்கும் பாரதீய ஜனதாக் கட்சிக்கும் ஒரே சமாதானம் "வெற்றிதான் முக்கியம்; தேர்ந்தெடுத்த ஆயுதமல்ல!"

இரண்டு கட்சிகளும் வெற்றி விழாக் கொண்டாடும்போது பலியிடப்படுவது பகைமையல்ல; நேர்மை.

கால அளவுப்படி உலகுக்கு இது கி.பி. இருபத்தொன்றாம் நூற்றாண்டாக இருக்கலாம். ஆனால் இந்தியர்கள் கால் ஊன்றியிருப்பது உண்மையில் கி.மு. இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டாகும்.



படிப்பகம்

www.padippakam.com

இந்தியாவுக்குள் ரோமானியர் வந்திருக்கலாம்; மொகலாயர்கள் வந்திருக்கலாம்; பிரித்தானியர் வந்திருக்கலாம்; பிரான்சியர் வந்திருக்கலாம்....

எத்தனை படையெடுப்புகள் வந்திருந்தாலும், அத்தனை பகைவர் களத்திலிருந்து வெளியேறியிருந் தாலும், இந்தியா தனது முதல் எதிரியுடனேயே இன்னும் மோதிக் கொண்டிருக்கிறது.

இந்திய வரலாற்றுக்காலம் கி.மு.வாக இருந்தாலும் கி.பி.யாக இருந்தாலும் நடக்கும் போர் திராவிட - ஆரியப் போர்தான்

ஏடறிந்த வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டங்களின் வரலாறுதான் என்கிறது சமூக விஞ்ஞானம் இதை இந்திய வரலாற்றறிவுடன் புரிந்து கொள்வதானால், "ஏடறிந்த (இந்திய) வரலாறு அனைத்தும் திராவிட - ஆரியப் போராட்டங்களின் வரலாறே ஆகும்!"

பாரதிய ஜனதா கட்சியின் தலைமையில் கிருபாநிதி அமர்த்தப்படலாம்.

திராவிடக் கட்சியாக நம்பப்படுகிற அமைப்புக்கு ஜெயலலிதா தலைமை தாங்கலாம்.

இதனாலெல்லாம் திராவிட - ஆரியப் போர் முடிவுக்கு வந்துவிட்டது என்று கொள்ளலாமா?

பெரியாரைப் போற்றும் தமிழகத்துக் கட்சிகளெல்லாம் தீவிர பார்ப்பனக் கட்சியான பாரதிய ஜனதாவுடன், அல்லது மிதவாதப் பார்ப்பனியக் கட்சியான காங்கிரசுடன் கூட்டணி கொள்வதில் போட்டி போட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இதிலே திராவிட - ஆரியப் போர் எங்கே நடந்து கொண்டிருக்கிறது என்று திகைப் புற்றுக் கொள்ளலாமா?

இந்தி ஆதிக்கத்துக்கு எதிராகவோ ஆங்கில மோகத்துக்கு எதிராகவோ எந்த முணுமுணுப்பும் இல்லை. 'வடவர்கள்" நம்மவர்களும் இல்லை; நல்லவர்களும் இல்லை என்கிற விமர்சனங்களெல்லாம் வெளுத்துப்போய், வடவர்களில் நல்லவர்களையும் நம்மவர்களையும் தேடித் தொழும் காலம் வந்து விட்டது. தெற்கை மறந்து வடக்கில் மயக்கம் கொண்டு தேசிய இனப் பிரச்னைகளையே திராவிட இயக்கம் உறைபனியில் மூழ்கடித்து விட்டது. பகுத்தறிவுப் பிரச்சாரம் நின்று விட்டது. திராவிட இயக்கமே தோற்றுவிட்டது. இப்போதும் கூடவா திராவிட - ஆரியப் போர் இருக்க முடியும் என்று கேட்கிறவர்களும் இருக்கலாம்.

திராவிட - ஆரியப் போர் முடிந்து விட்டது என்று ஒரு முடிவுக்கு வருவோமானால், 'வெறுக்கத் தக்கதா பிராமணியம்?' என்று ஒரு நூலை சோவானவர் வெளியிட வேண்டிய அவசியம் நேர்ந்தது ஏன்?



பகுஜன் சமாஜ் கட்சிக்கும் பாரதீய ஜனதாக் கட்சிக்கும் ஒரே சமாதானம் "வெற்றிதான் முக்கியம்; தேர்ந்தெடுத்த ஆயுதமல்ல!"

(சோவானவர் தமது நூலில் பார்ப்பனர்களில் தமிழுக்குத் தொண்டு செய்தவர்கள் உண்டு. 'விடுதலைப் போரில்' தியாகம் செய்தோர் உண்டு; விஞ்ஞானத்தில் ஆற்றலாளர்கள் உண்டு என்று புகழ் பெற்ற சில பார்ப்பனர்களைப் பட்டியலிட்டுப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

பட்டியலிடப்படும் இந்தத் தனிநபர்களின் திறமை பெருமைகள் வேறு; பார்ப்பனியம் என்பதன் உள்ளடக்கக்கூறுகள் வேறு.

சுப்பிரமணியக் கவிஞர் வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர் என்று அழகிய தமிழில் கவிதை வடித்தார் என்பதால் பார்ப்பனியம் பாராட்டுக்குரிய தாகிவிடுமா?

பத்மா சுப்பிரமணியம் திறமையாக ஆடுகிறார் என்பதால் பார்ப்பனியம் தகுந்ததாகி விடுமா?

பார்ப்பனப் பெண்களும் அழகான வர்களாக இருக்கலாம். இதனால் பார்ப்பனியம் அழகானதென்று ஆகிவிடுமா?

பார்ப்பனியத்தின் உள்ளடக்கம் என்பது பாசிசம்தான். பிறப்பிலேயே உயர்வு தாழ்வு உண்டென்று நியாயப் படுத்துவதுதான். பார்ப்பனர் உயர்ந்தோர்; ஏனையோர் தாழ்ந்தோர்; அவர் கள் பார்ப்பனர்களுக்குத் தொண்டு செய்வதற்கென்றே படைக்கப்பட்டவர்கள் என்று ஆணவம் பேசுவது தான்.

இந்தப் பார்ப்பனியக் கருத்தோட்டத்துக்கு நேரெதிரானதுதான் திராவிடச் சிந்தனை. அது பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் மனு நீதியல்ல; மானுட நீதி சொல்கிறது.)

ராகுல சாங்கிருத்தியாயன் (ராகுல்ஜி) என்றொரு அறிஞர். அவர் பார்ப்பன இனத்தவர்தான். ஆனால் அவர் பார்ப்பனியத்தை வெறுத்தார்; பார்ப்பனர்கள் அவரை வெறுத்தார்கள். இதனால் திராவிட - ஆரியப்போருக்கு இப்போது தேவை எழவில்லை என்று வாதிடலாமா?

பார்ப்பனியச் சிந்தனையாளர்கள் இன்று "வெறுக்கத் தகுந்ததா பிராமணியம்" என்று கேட்கலாம். உலகில் இதுவரை கண்ட ஆட்சிமுறைகளிலேயே ராமராஜ்யம் போல் ஒரு நல்லாட்சி நடந்ததில்லை என்று வாதாடலாம். ராமராஜ்யத்தின் சாரம்தான் இந்துத்துவா என்று விரிவுரைகள் தரப்படலாம்.

ஆனால், இத்தனை உத்திகளும் திராவிட - ஆரியப் போரில் சில திருப்பங்களை அல்லது திருத்தங்களை வைக்கின்றனவே தவிர இவை போரை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியல்ல.

ஆரிய சனாதனங்களை அரசேற்ற விரும்பும் சங்கப்பரிவாரங்களுக்கு இப்போதும் கரபாத்ரி என்ப



படிப்பகம்

www.padippakam.com

வர் எழுதிய ஒரு நூல் அரசியல் வழிகாட்டியாகவே கருதப்படுகிறது. அந்த நூலின் பெயர், 'மார்க்சியமும் ராம ராஜ்யமும்'

(இந்த நூலுக்கு மறுப்பாக 'ராம ராஜ்யமும் மார்க்சியமும்' என்றொரு நூலைப்





படைத்தளித்தார் ராகுல சாங்கிருத்தியாயன்.

திராவிட - ஆரியப் போர் முடியவில்லை என்பதை மாத்திரமல்ல, ஆரியச் சூழ்ச்சிகள் அனைத்தும் முறியடிக்கப்படும் வரை இந்தப் போர் தொடரவேண்டும் என்கிற உத்வேகத்தையும் தருகிறது ராகுலரின் இந்த நூல்.

"இன்றுள்ள சமூக நிலைமைகள் அனைத்தையும் பலாத்காரமாக வீழ்த்தினாலொழிய தங்கள் இலட்சியங்களை அடைய முடியாது என்று கம்யூனிஸ்ட்டுகள் பகிரங்கமாகப் பிரகடனம் செய்கிறார்கள்" என்று மார்க்சியப் பேராசான்கள் மார்க்சும் எங்கெல்சும் 'கம்யூனிஸ்ட் அறிக்கையில்' முத்திரை வைத்தார்கள். அறிக்கை எழுதப்பட்டது 1848-இல் அப்போது கம்யூனிஸ்ட் கட்சியே உலகில் அறிமுகமாகவில்லை. அப்போதுள்ள சூழலில் அன்றையச் சமூக நிலைமைகள் அனைத்தையும் பலாத்காரமாக வீழ்த்த வேண்டும் என்கிற ஆதங்கமும் முனைப்பும் நியாயமாகக் கூட இருக்கலாம். ஆனால் இன்றைய உலகம் வேறானது. மார்க்ஸ் காலத்திய முதலாளித்துவச் சூழலே மறைந்து விட்டது. பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கே தேவையற்ற ஒரு சமூகச் சூழலில், நாடாளுமன்றத் தேர்தல் மூலமே கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வரமுடியும்; அது அவ்வாறே முடிந்தும் இருக்கிறது. ஆகவே வர்க்கப் போராட்டத்துக்கு இனி வாய்ப்பே இல்லை. 'சமாதானம் - சகவாழ்வு' என்கிற புதிய முழக்கமே கம்யூனிஸ்டுகளின் இன்றையத் தேவை; நிலைப்பாடு என்று கருதியவர்களும் பிரச்சாரம் செய்தவர்களும் உண்டு. ஆனால், இந்தக் கோட்பாட்டை முன்வைத்தவர்கள் காணாமற் போனார்களே தவிர, வர்க்கப் போராட்டம் மறைந்து விடவில்லை. புரட்சியின் தேவை முடிந்து விடவில்லை.

**முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகப் பிரமை கம்யூனிஸ்டுகளை மாத்திரமல்ல; திராவிட இயக்கத்தவர்களையும் மயத்திலாழ்த்தியிருக்கிறது என்பது உண்மைதான். இதனால் திராவிட - ஆரியப் போர் முடிந்து விட்டதென்று முடிவு கட்டுகிறவர்கள் மூடர்களே ஆவார்கள்.**

முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகப் பிரமை கம்யூனிஸ்டுகளை மாத்திரமல்ல; திராவிட இயக்கத்தவர்களையும் மயத்திலாழ்த்தியிருக்கிறது என்பது உண்மைதான். இதனால் திராவிட - ஆரியப் போர் முடிந்து விட்டதென்று முடிவு கட்டுகிறவர்கள் மூடர்களே ஆவார்கள்.

டெல்லிக்குச் செல்வதும், இந்தியப் பார்ப்பனிய ஜனநாயக - சட்டமாய்மாலங்களைப் பயன்படுத்தியே அதனை வீழ்த்துவதும் ஒரு போர்த்துந்திரம் தான் என்று பதவிச் சுகமோ தத்துவச் சமரசமோ அறியாத தொண்டர்களுக்கு விளக்கம் தரலாம்.


ஆனால் பற்றிக் கொள்வதற்கும் படர்ந்து விரிவதற்கும் பந்தல் கிடைத்து விட்டது என்பதால் திராட்சைக் கொடி நிலத்தையும் வேர்களையும் மறந்து விடும்போது கருகிச் சருகாவது தவிர்க்க முடியாதது. ●



படிப்பகம்

www.padippakam.com

தமிழின எதிர்ப்பில்



# சிங்கள ராணுவமும் இந்து ஏடும்

சோலை

சிங்களத்தாய் பெற்றவர்கள் இந்த மண்ணின் சீமந்தப் புத்திரர்கள் தமிழ்க் கிறுக்கி பெற்றவர்கள். இந்தப் பூமியின் கொத்தடிமைகள் என்று கூச்சலிடுகின்ற ஒரு இயக்கம் இலங்கையில் உண்டு. அந்தச் சிங்கள இனவாதக் கட்சியின் பெயர் ஜனதா விமுக்தி பெரமுனே. சுருக்கமாக ஜே.வி.பி. என்று சொல்வார்கள்.

இந்தக் கட்சி மே தின விழாக் கொண்டாடியது. ஈழத் தமிழர்களுக்கு எதிராக மட்டுமல்ல ஒட்டுமொத்த இலங்கைத் தமிழர்களுக்கும் எதிராக எந்த அளவிற்கு இனவெறியைத் தூண்ட முடியுமோ அந்த அளவிற்கு இந்த விழாவில் பேசியவர்களெல்லாம் அக்கினிச் சொற்களை வாரி இறைத்தனர்.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கேவுக்கும் ஏற்பட்டுள்ள போர் நிறுத்த உடன்பாட்டை ஏற்க மாட்டோம். ஈழத் தமிழர்களுக்கு இடைக்கால அரசு என்பது நாட்டைத் துண்டாடும் நாச வேலை. அந்த உடன்பாட்டைச் சுட்டெரிப்போம் என்று அந்தச் ஜே.வி.பி சிங்கள இன வெறி இயக்கம் போர்ப் பிரகடனம் செய்தது.

●●

போர் நிறுத்த உடன்பாட்டை ஏற்க மாட்டோம். ஈழத்தமிழர்களுக்கு இடைக்கால அரசு என்பது நாட்டைத் துண்டாடும் நாச வேலை. அந்த உடன்பாட்டைச் சுட்டெரிப்போம் என்று அந்தச் ஜே.விபி சிங்கள இன வெறி இயக்கம் போர்ப் பிரகடனம் செய்தது.

●●

அந்த உடன்பாட்டை எதிர்த்து இயக்கங்கள் நடத்துவோம் என்றும் அறிவித்தது.

இலங்கைக் குடியரசுத் தலைவர் சந்திரிகாவின் சுதந்திரக் கட்சியும் மே தின விழாக் கொண்டாடியது. அம்மையாரே எழுந்தருளினார். அந்த மேடையில் பேசிய அனைவருமே போர் நிறுத்த உடன்பாட்டைப் பொசுக்குவோம் என்றே கொக்கரித்தனர்.


நான் பிரதமரானால் விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்த உடன்பாடு காண்பேன். ஈழப் பிரச்னைக்குத் தீர்வு காண்பேன். அங்கு இடைக்கால அரசு அமைய வழிவகை காண்பேன் என்று கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ரணில் விக்கிரசிங்கே வாக்குறுதி தந்தார்.

இருபது ஆண்டுகளாக உள்நாட்டுப் போரால் உருக்குலைந்து போன சிங்கள மக்களும் தமிழ் மக்களும் அவருடைய அணிக்கு அமோக வெற்றி தேடித் தந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com



அவர் ஆட்சிக்கு வந்த பின்னர் நடந்த உள்ளாட்சித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கே கட்சி மட்டும்தான் வெற்றி பெற்றது. சந்திரிகாவின் கூட்டணியும், சிங்கள இன வெறி ஜே.வி.பி கட்சியும் மிகக் கேவலமான தோல்வியைத் தழுவின.

இப்படி இரண்டுமுறை மக்களின் தீர்ப்பைப் பெற்ற பிரதமர் ரணில் விக்கிரம சிங்கே இன்றைக்குத் தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்றுகிறார்; ஈழப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதை எல்லா மக்களும் வரவேற்கிறார்கள். சமாதானத் தேருக்கு ஆரத்தி எடுப்போம் என்கிறார்கள்.

ஆனால் சிங்கள இன வாத ஜே.வி.பி கட்சியும் சந்திரிகாவின் கூட்டணியும் புத்த மதத்தைத் தவிர வேறு எந்த மதத்திற்கும் இடம் இல்லை என்கின்ற புத்த சாமியார்களும் போர் நிறுத்த உடன்பாட்டைக் கருவறுப்போம் என்கிறார்கள்.

சிங்கள மொழி மட்டும் தான் இலங்கையின் ஆட்சி மொழி, பயிற்சி மொழி, நீதிமன்ற மொழியாக இருக்க வேண்டும் என்பதனை இவர்கள் இன்றைக்கும் வலியுறுத்தி வருகிறார்கள்.

இவர்களுக்கும் மேலாக என்றென்றும் உள்நாட்டுப்போர் தொடரவேண்டும் என்று இலங்கை இராணுவத் தளபதிகளில் ஒரு பகுதியினர் விரும்புகிறார்கள்.

உள்நாட்டுப் போர் தொடர்ந்தால் தான் வெளிநாடுகளில் ஆயுதம் வாங்க முடியும். அப்படி ஆயுதங்கள் வாங்கும்போது எத்தகைய பேரங்கள் நடைபெறும் என்பதனை எத்தனையோ நாடுகள் மெய்பித்து விட்டன. நமக்குப் போபர்ஸ் போதாதா? உண்மையில் இன்றைக்கு இலங்கை ராணுவ வீரர்கள் சோர்ந்து போய் விட்டனர். உள்ளத்தில் உறுதி இல்லை. நாற்பதாயிரம் பேர் ராணுவத்தை விட்டே ஓடிவிட்டனர். புதிதாகப் படையில் சேர இளைஞர்கள் அஞ்சுகின்றனர்.

இப்போது போர் நிறுத்த உடன்பாட்டை எதிர்க்கின்ற சிங்கள இனவாதிகள் தங்கள் வீட்டுப்பிள்ளைகளை ராணுவத்திற்கு அனுப்புவார்களா? அவர்கள் வீட்டுப்பிள்ளைகளும் ராணுவத் தளபதிகள், அதிகாரிகள் வீட்டுப் பிள்ளைகளும் வெளிநாடுகளில் படித்துக் கொண்டிருக்கின்றனர். மரண பயத்தின் மடியில் தவழ்கின்ற இவர்கள் ஏழைச் சிங்களவர் வீட்டுப் பிள்ளைகளைப் போர் முனைக்கு வலுக்கட்டாயமாக இழுக்கிறார்கள்.

சிங்கள உயர்குடியில் பிறந்தவர்கள் ராணுவத் தளபதிகள். ராணுவ



படிப்பகம்

www.padippakam.com

வீரர்கள் தாழ்ந்த குடிகளில் பிறந்தவர்கள். உயர்குடி வாழ நாம் ஏன் உயிர்த்தியாகம் செய்ய வேண்டும் என்று அவர்கள் கருது கிறார்கள்.

அதே சமயத்தில் போர் நிறுத்த உடன்பாட்டை சீர்குலைத்து மீண்டும் விடுதலைப் புலிகளைப் போர்க்களத்திற்கு அழைக்கின்ற வேலையை இலங்கை ராணுவம் சிறப்பாகச் செய்து வருகிறது. குறிப்பாக இலங்கை கடற்படை இதில் குறியாக இருக்கிறது. அதற்குச் சந்திரிகாவின் ஆசியும் ஆதரவும் உண்டு என்று சொல்லத் தேவையில்லை.

இப்போது அந்தக் கடற்படை எப்படிச் செயல்படுகிறது என்பதனைப் பார்க்கும் முன்னர், இதற்கு முன்னர் எப்படிச் செயல்பட்டது என்பதனைப் பார்க்க வேண்டும்.

இந்திய ராணுவம் இலங்கை சென்ற பின்னர் அந்த நாட்டு அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது. விடுதலைப்புலிகளுக்குப் பொது மன்னிப்பும் வழங்கப்பட்டது.

சென்னையில் இயங்கிய தங்கள் அலுவலகத்தை மூடி விட்டு இருந்த ஆவணங்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு விடுதலைப் புலிகள் கடல் மார்க்கமாக ஈழம் திரும்பினர்.

அப்போது அங்கிருந்த இந்திய ராணுவத் தளபதி திவிந்தர் சிங்கிடம் இதனை முறைப்படி தெரிவித்த பின்னர்தான் இந்தப் பயணத்தை மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் திரிகோணமலை மாவட்டத் தளபதி புலேந்திரன், மட்டக்களப்பு மாவட்டத் தளபதி குமரப்பா உட்பட மொத்தம் பதினேழு முன்னணித் தளபதிகள் அந்தப் படகில் இருந்தனர்.

●●

**சிங்கள இன வாத ஜே.வி.பி கட்சியும் சந்திரிகாவின் கூட்டணியும் புத்த மதத்தைத் தவிர வேறு எந்த மதத்திற்கும் இடம் இல்லை என்கின்ற புத்த சாமியார்களும் போர் நிறுத்த உடன்பாட்டைக் கருவறுப்போம் என்கிறார்கள்.**

●●

நடுக்கடலில் இலங்கைக் கடற்படை அவர்களைச் சுற்றி வளைத்துக் கைது செய்கிறது. அவர்கள் யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்படுகிறார்கள். இந்திய ராணுவத் தளபதியிடம் விடுதலைப்புலிகள் முறையிடுகிறார்கள். இந்திய ராணுவம் இலங்கை கடற்படையினரையும் பொது மன்னிப்புக்கு விரோதமாகக் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளையும் சுற்றி வளைக்கிறது. விடுதலைப் புலிகளுக்கு எந்தக் கேடும் நிகழக் கூடாது என்று இலங்கை கடற்படைக்கு அறிவுறுத்துகிறது.

கைது செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று இந்திய அரசும் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனேயைக் கோருகிறது.

கைது செய்யப்பட்டவர்கள் குற்றவாளிகள் எனவே அவர்களை விடுதலை செய்ய முடியாது. இந்திய ராணுவம் இந்தப் பிரச்னையில் தலையிடாது ஒதுங்கிக் கொள்ள வேண்டும். பிரபாகரனைப் பிடித்துக் கொடுக்க வேண்டும் என்று ஜெயவர்த்தனே சீற்றம் கொள்கிறார்.

விடுதலைப் புலிகளுக்குக் காவல் நின்ற இந்திய ராணுவம் விலகிக் கொள்கிறது. கைது





படிப்பகம்

www.padippakam.com



செய்யப்பட்டு காவலில் இருந்த விடுதலை இயக்கத்தின் முன்னணித் தளபதிகள் மீது சிங்கள ஓநாய்கள் பாய்கின்றன. அவர்களை விமானத்தில் கொழும்பு கொண்டு செல்ல ஆயத்தமாகிறார்கள். எதிரியிடம் சரண் அடைவதைக் கேவலம் என்று கருதுகின்ற அந்தத் தளபதிகள் அனைவரும் கழுத்தில் தொங்கிய நஞ்சுக் குப்பிகளுக்கு வேலை கொடுக்கிறார்கள்.

இப்படி ஈழ விடுதலை இயக்கத்தின் இளம் தானைத் தளபதிகள் தங்கள் உயிரையே மாய்த்துக் கொள்கிறார்கள். (நால்வர் மட்டுமே உயிர் பிழைத்தனர்)

போர் முனையில் செயற்கரிய காரியங்கள் செய்து ஈழத்து மக்களின் நெஞ்சங்களில் இன்றும் குடிகொண்டிருக்கும் புலேந்திரன், குமரப்பா ஆகியோர் உடல்களில் நூற்றுக்கணக்கான காயங்கள். ஆம். இலங்கைக் கடற்படை இன வெறியர்கள் துப்பாக்கி முனைகளில் குத்திக் கிழித்த காயங்கள், ஆனால் ரத்தம் கொட்டிய அந்தக் காயங்கள்தான் ஈழத்து மக்களை வெகுண்டெழச் செய்தது.

இப்படி இந்திய அரசின் முயற்சியால் ஏற்பட்ட முதல் போர் நிறுத்த உடன்பாட்டை இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே காலில் போட்டு மிதித்தார். மீண்டும் விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்தினர்.

இலங்கை ராணுவம் என்றும் அந்த நாட்டு அரசின் கட்டுப்பாட்டில் இருந்தது இல்லை. ராணுவத் தளபதிகள் போர் தொடருவதையே விரும்புகிறார்கள் என்பதற்கு இதோ இன்னொரு உதாரணம்.

சந்திரிகா தேர்தல் களத்திற்கு வந்தபோது என்ன சொன்னார்? தான் பிரதமராகப் பொறுப்பேற்றால் ஈழத்தமிழர் பிரச்னைக்குத்



படிப்பகம்

www.padippakam.com



தீர்வு காண்பேன் என்றார்.

அவரும் தேர்தலில் வெற்றி பெற்றார். பிரதமராக வந்தார். விடுதலைப்புலிகளுக்கும் அவருக்கும் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. ஈழத் தமிழ் பகுதிகளில் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும் என்பது முதல் கோரிக்கை.

அந்தக் கோரிக்கையைச் செயல்படுத்துவதாகச் சந்திரிகா அறிவித்தார். மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு ஏராளமான லாரிகள் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணமாகின. ஆனால் வழியில் அதே லாரிகளை இலங்கை ராணுவம் வழிமறித்து நிறுத்தியது.

ஈழத்துத்தமிழன் 'பட்டினி கிடந்து சாவதற்கு வரம் வாங்கி வந்தவன். வறுமையே அவனுக்குத் தோழன் அவனுக்கு இவ்வளவு உணவுப் பொருட்களைக் கொண்டு செல்ல அனுமதிக்க மாட்டோம். சந்திரிகா போட்ட உடன்

●●

**இன்றைய இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கேவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள போர் நிறுத்த உடன்பாட்டை இந்தியா, அமெரிக்கா உட்பட உலகமே வரவேற்கிறது.**

●●

பாட்டை இலங்கை ராணுவம் ஒருபோதும் ஏற்காது. அத்தனை லாரிகளையும் ராணுவ முகாம்களுக்குக் கொண்டு செல்லுங்கள் என்று இலங்கை ராணுவத் தளபதிகள் உத்தரவிட்டனர். அவர்கள் எதனை விரும்பினரோ அதுதான் நடைபெற்றது. சந்திரிகாவின் சமாதான முயற்சியை ராணுவம் முறியடித்தது.

அந்த ராணுவத் தளபதிகள் உருட்டி விளையாடும் வெறும் பொம்மைதான் இலங்கை அரசு என்பது மீண்டும் மெய்ப்பிக்கப் பட்டது.

இப்படி விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு செய்து கொண்ட இரண்டாம் ஒப்பந்தமும் பொய்யாய், பழங்கதையாய்ப் போனது.

எனவே, கீழே போட்டு விட்ட ஆயுதங்களை மீண்டும் விடுதலைப்புலிகள் கரங்களில் ஏந்தினர். எல்லா முனைகளிலும் இலங்கை ராணுவத்தை எதிர் கொண்டனர். முறியடித்தனர்.

பறவைகளுக்கு உடலுக்கு வெளியே இரண்டு புறங்களிலும் இறக்கை முளைக்கும். ஆனால் விடுதலைப்புலிகளுக்கு நெஞ்சுக் கூட்டுக்குள் ஆயிரமாயிரம் சிறகுகள் முளைத்திருக்கின்றன. அதனால்தான் அவர்கள் எவருக்கும் தெரியாது பறந்து பறந்து எட்டாத தூரத்தில் இருக்கும் எதிரிகளையும் வெற்றித் தேவதைக்குப் படையல் போடுகிறார்கள்.

இன்றைய இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கேவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள போர் நிறுத்த உடன்பாட்டை இந்தியா, அமெரிக்கா உட்பட உலகமே வரவேற்கிறது.

இருதரப்பினரும் உளப்பூர்வமாக உடன்பாட்டைச் செயல்படுத்துவதில் அதிக ஆர்வம் கொண்டிருக்கின்றனர். ஈழத்தில் இப்போது அமைதி திரும்பியிருக்கிறது ஏன்? சிங்கள மக்கள் கூட இப்போது அச்சமின்றித் தென்றலைப்போல உலவுகிறார்கள்.

ஆனால், வழக்கம் போல இலங்கைக் கப்பற்படை உடன்பாட்டைச் சீர்குலைக்கும் அழிவு வேலைகளை ஆரம்பித்திருக்கிறது.

போர் நிறுத்தத்தைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகள் வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்கள் வாங்கி வந்ததாகவும் அப்படிக் கொண்டு வந்த அவர்களுடைய படகுகளைச் சுற்றி வளைத்துப் பிடித்து விட்டதாகவும் நம்ம ஊர் 'இந்து', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களில் செய்தி வெளியிட்டிருந்தன.

ஆனால், உண்மை என்ன? வாழைச் சேனையைச் சேர்ந்த நூர்முகமது நசீர் என்பவருக்குச் சொந்தமான படகுகள் மட்டக்களப்பு அருகே வாகரை என்ற இடத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்தன. அந்தப் படகுகளை விடுதலைப்புலிகளின் படகுகள் என்று இலங்கைக் கடற்படை ராக்கெட்டுகளை வீசிச் சுட்டது.



படிப்பகம்

www.padippakam.com

படகுகளில் இருந்தவர்கள் பாதுகாப்பு கருதிப் பதறி ஓடினர். கரையோர மக்கள் அவர்களைக் காப்பாற்றினர். அவர்களில் 16 பேர், சிங்களவர்கள். 18 பேர், இஸ்லாமியர்கள். இருவர் ஈழத் தமிழ் மீனவர்கள்.

நடந்தது என்ன என்பதனையும், விடுதலைப் புலிகள் ஆயுதங்கள் கடத்த வில்லை என்பதையும் சிங்கள ராணுவ அமைச்சர் விளக்கி விட்டார். ஆனால், அந்தச் செய்தியை நம்ம ஊர் ஆங்கில ஏடுகள் கண்டு கொள்ளவே இல்லை. ஆனால், பத்திரிகை தர்மம் பற்றிக் குடம் குடமாகக் கண்ணீர் வடிப்பார்கள்.

விடுதலைப் புலிகளின் படகுகள் என்று இலங்கை கடற்படை இப்போது சுடத் தொடங்கி இருப்பது உடன் பாட்டை முறியடிப்பதற்கான முயற்சியாகும்.

இந்தச் சம்பவத்திற்குப் பின்னர், இலங்கை குடியரசுத் தலைவர் சந்திரிகா ராணுவத் தளபதிகளை அழைத்துப் பேசியிருக்கிறார். அப்படி அவர் பேசும் போது பிரதமர் ரணில் விக்கிரம சிங்கேயையும் அழைத்திருக்க வேண்டும். அதுதான் நியாயமும் கூட. ஆனால், அந்த நல்ல காரியத்தை அவர் நாடவில்லை. என்ன காரணம்?

போர் நிறுத்த உடன்பாட்டிற்குச் சமாதி எழுப்ப நினைப்பவர்கள், தமிழ் இனத்தையே அழிக்கத் துடிப்பவர்கள் எப்படி அமைதியை விரும்புகிறவர்களை அரவணைத்துக் கொள்ள முடியும்?

ஏற்கனவே இரண்டு முறை போர் நிறுத்த உடன்பாடு பொசுக்கப்பட்டதற்கு இலங்கை ராணுவமும் ஆட்சி அதிகாரத்தின் உச்சாணிக்கொம்பில் உட்கார்ந்திருந்தவர்களும் தான் காரணமாகும்.

இப்போதும் அவர்களே மூன்றாவது போர் நிறுத்த உடன்பாட்டிற்குக் கொள்ளி வைக்கத் துடிக்கிறார்கள். உலகம் அவர்களை வெகு விரைவில் எள்ளி நகையாடும். ●

## கவிஞர் தாராபாரதி நினைவாக



# பெட்டிச் செய்தி

புகுந்த வீட்டிலிருந்து
திரும்பி வந்த பெண்
சீர் கேட்கிறாள் —

*அப்பா, கேள்!*
*மாமியார்க்கு நகைப்பெட்டி - என்*
*மாமனார்க்குப் பணப்பெட்டி!*
*'ஆமாம்சாமி' கணவனவன்*
*அவனோர் கட்டுப்பெட்டி - அந்தத்*
*துப்புக் கெட்டவனுக்கு ஒரு*
*தொலைக்காட்சிப் பெட்டி!*

*அம்மா, அப்படியே*
*எனக்கு ஒரு தீப்பெட்டி*
*இப்போதைக்கு இதுபோதும் -*
*குளிக்கிற தேதி*
*வருதோ இல்லையோ*
*நான் - தீக்*
*குளிக்கிற சேதி வரலாம்!*
*முழுகாமல் போனாலும்*
*நான் - தீயில்*
*முழுகியதாய்*
*ஆள் வரலாம்*
*ஏழெட்டு நாள்கழித்து - என்*
*இழவுச் சேதி வந்தால் - ஒரு*
*சவப்பெட்டியுடன்*
*சடுதியில் வாருங்கள்!*
*அதையும் உம்மிடமே*
*அவர்கள் கேட்கலாம்!*



படிப்பகம்

www.padippakam.com



●●

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தரும் தன் நிலைப்பாட்டை வைகோ இந்தியப் பாராளுமன்றத்தில் இத்தனை வெளிப்படையாகவும் ஆணித்தரமாகவும் பதிவு செய்தது இலங்கையில் நிலவிவரும் இன்றைய சூழ்நிலையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

●●

# நான் என்றும் புலிகளின் தோழனே!

இன்னும் அணையாமல் பற்றி எரிந்து கொண்டிருக்கும் குஜராத் நிலைமை குறித்து 184-வது பிரிவின் கீழ் விவாதம் நடத்த வேண்டும் என்று பாராளுமன்றத்தில் தொடர்ந்து ஆறு நாட்கள் எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. இதைத் தொடர்ந்து ஏப்ரல் 30-ஆம் தேதி எதிர்க்கட்சிகளின் குஜராத் பிரச்னை குறித்த கண்டனத் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பும் விவாதமும் நடந்தது.

30-ஆம் நாள் தொடங்கிய விவாதம் மறுநாள் விடிய விடியத் தொடர்ந்தது. அந்த விவாதத்தின்போது பேசிய மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நடந்த ஜனநாயக அத்துமீறல்கள் பற்றி விரிவாகப் பேசினார்.

அப்போது குறுக்கிட்ட காங்கிரஸ் உறுப்பினர் மணிசங்கர் அய்யர் ராஜீவ் கொலை சம்பவம் பற்றியும், விடுதலைப் புலிகள் பற்றியும் குறிப்பிட்டு வைகோ ஒரு கொலைகாரர் என்ற பொருள்படப் பேசினார்.

மணிசங்கர் அய்யரின் இந்தப் பேச்சு அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு விட்டது. மீண்டும் எழுந்து தன் கருத்துக்கு விளக்கமளிக்கும் விதமாகப் பேசிய மணிசங்கர் அய்யர், நான் வைகோவைக் கொலைகாரர் என்றோ தேச விரோதி என்றோ கூறவில்லை என்றார்.

இதற்கிடையில் குறுக்கிட்ட அதிமுக உறுப்பினர் செல்வகணபதி, "தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் இயக்கத்தை வைகோ ஆதரிப்பதாகக் கூறுகிறாரே" என்று நேரடியாகவே கேட்டார்.

அப்போது அதற்கு மிகத் தெளிவாகவும் திடமாகவும், "நான் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்தான். ஈழத் தமிழர்களுக்காக அவர்கள் போராடுகிறார்கள். புலிகளை நேற்றும் ஆதரித்தேன். இன்றும் ஆதரிக்கிறேன். நாளையும் ஆதரிப்பேன்" என்று வைகோ பதிலளித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தரும் தன் நிலைப்பாட்டை வைகோ இந்தியப் பாராளுமன்றத்தில் இத்தனை வெளிப்படையாகவும் ஆணித்தரமாகவும் பதிவு செய்தது இலங்கையில் நிலவிவரும் இன்றைய சூழ்நிலையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

அஸ்ஸாமில் படுகொலைகள் அரங்கேறிய அந்த நேரத்தில்தான் தேர்தல்கள் நடத்தப்பட்டன. இது காங்கிரஸ் அரசின் கெட்ட எண்ணம் இல்லையா? துப்பாக்கி முனையில் தேர்தல் நடத்தினார்கள். 10 சதவீதம் பேர்தான் வாக்களித்தார்கள். அவர்கள்தான் இன்று ஜனநாயகம் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் வாய்கிழிய பேச முன்வருகிறார்கள்.

மத்திய அரசு ஆட்சி நடத்தும் டெல்லி நகரத்திலேயே, பட்டப்பகலிலேயே, நடுவீதிகளிலேயே சிறுபான்மை சீக்கிய இனத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள்



படிப்பகம்

www.padippakam.com



கொலை செய்யப்படவில்லையா? அவர்கள் இந்திரா காந்தி படுகொலையோடு எந்த சம்பந்தமும் இல்லாதவர்கள். இதனால், உள்துறை அமைச்சர் பதவி விலக முன் வந்தாரா? ஆனால், அப்போதைய பிரதமர் ராஜீவ்காந்தி இப்படுகொலைகளை நியாயப்படுத்திப் பேசினார். ஒரு பெரிய விருட்ஷம் சாய்கிறபோது பூமி நடுங்கத்தானே செய்யும்? என்றார்.

1984-இல் டெல்லியில் ரத்தக்களறி நடந்தேறியது. அதை தடுக்க காவல்துறையில் ஒரு துப்பாக்கிக் குண்டுகூட வெடிக்கவில்லை. இதற்கெல்லாம் யார் காரணம்?

டி.ஆர்.பாலு (குறுக்கிட்டு) வைகோ பற்றி மணிசங்கர் அய்யர் கூறியது வாபஸ் வாங்க வேண்டும். ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டபோது உடன் இருந்த காங்கிரஸ் தலைவர்கள் எங்கே ஓடிப்போனார்கள். (தி.மு.க. எம்.பி.க்கள் அனைவரும் மணிசங்கர் அய்யர் கூறியதை வாபஸ் வாங்க வேண்டும் என்று ஆத்திரத்தோடு கூறினர்.)

அத்வானி: இந்த அவையில் வைகோவைப் பற்றிக் கொடுமையான குற்றச்சாட்டுக்களை அவதூறாக மணிசங்கர் அய்யர் கூறியது மிகவும் தவறாகும். ஒரு உறுப்பினரைப் பற்றி இப்படி பேசக் கூடாது. மணிசங்கர் அய்யர் பேசியதை அவைக்குறிப்பிலிருந்து அகற்றப்பட வேண்டும். அவர் இந்த அவையில் மன்னிப்பு கேட்க வேண்டும். விடுதலைப் புலிகளைப் பற்றி இங்கு விவாதம் நடக்கவில்லை. இங்கு குஜராத்தைப் பற்றிதான் பேச வேண்டும்.

மணிசங்கர் அய்யர்: குஜராத் பிரச்னை பற்றித்தான் விவாதிக்கிறோம். ஆனால், 1984 டெல்லி சம்பவங்கள் பற்றி உறுப்பினர் பேசுகிறார். இது தொடர்பாக அவர் ஒருவரை மட்டும் குற்றம் சாட்டவில்லை. காங்கிரஸ்காரர்கள் அனைவருமே சீக்கியப் படுகொலையில் ஈடுபட்டவர்கள் என்பதுபோல பேசுகிறார். இவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். அமைச்சர் அத்வானி கூறுவதுபோல் நான் கூறவில்லை. நான் கூறியது என்னவென்றால்...

வைகோ: அவர் என்னை கொலைகாரர் என்கிறார்.

மணிசங்கர் அய்யர்: நான் அவரைக் கொலைகாரர் எனக் கூறவில்லை. நான் அவர் தேச விரோதி எனக் கூறவில்லை.

சிம்ரஞ்சித் சிங் மான்: நான் இந்த விவாதத்தில் அரசாங்கத்தை எதிர்த்து வாக்களிக்கப் போகிறேன். ஆனால், டெல்லியில் எனது சமுதாயமான சீக்கிய மக்களை இனப் படுகொலை செய்த அரசு அன்றைய காங்கிரஸ் அரசு என்று வைகோ கூறியது முற்றிலும் உண்மை என்பதை அறுதியிட்டுச் சொல்வேன்.

செல்வகணபதி: தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் இயக்கத்தை வைகோ ஆதரிப்பதாகக் கூறுகிறாரே?

வைகோ: நான் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்தான். ஈழத் தமிழர்களுக்காக அவர்கள் போராடுகிறார்கள். புலிகளை நேற்றும் ஆதரித்தேன். இன்றும் ஆதரிக்கிறேன். நாளையும் ஆதரிப்பேன். ●



படிப்பகம்

www.padippakam.com

மே 7

## தோழர் வி.பி.சி. நினைவாக


# தந்தையே விடை பெறுகிறேன்

அதிகாலையில் - வீடு திரும்பிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் தங்கள் பாதையிலெல்லாம் பேசிக் கொண்டு போனார்கள்.

வி.பி.சி. இறந்து போனார்!

எனது பாதை இருண்டு திரண்டது.

தேசம் ஒரு மாமனிதரை



இழந்தது.

தொழிலாளி வர்க்கம் தனது தோழரை இழந்தது.

வரலாறு தனது இழப்பை ஈடுசெய்து கொள்ளும்.

நான் என்ன செய்வேன்.

என் தந்தை இறந்து போனார்

இனி,

நான் யாரிடம் கோபித்துக் கொள்வேன்?

அவருக்கு நான் 'கெட்ட குமாரன்'தான். ஆனாலும், மூத்த மகன். அப்படித்தான் வி.பி.சி. என்னைத் தன் நெஞ்சிலே போட்டு வளர்த்தார்.

எத்தனை முறை என் பாதங்களால் உதைத்திருக்கிறேன்!

ஆனாலும், தந்தையுள்ளம் தவித்ததெல்லாம் இப்படித்தான்; "இன்னும் உனக்கொரு செருப்பு வாங்கித் தர முடியவில்லையே!"

பலமுறை கோபத்தில் அவரைக் கெட்டவார்த்தைகளால் திட்டி இருக்கிறேன். மழலையை ரசிக்கும் ஒரு தாயைப் போல் என்னைப் பார்த்தபடி அருகில் இருப்பவர்களிடம் சொல்வார்; "கவிஞர்களே இப்படித்தான்..."

யாருக்குக் கிடைத்ததிந்தப் பேறு?

எல்லாம் இன்று பறி போயிற்றே!

ஏ கிழவா, என்னைத் தவிக்க விட்டுவிட்டாயே...

முப்பது ஆண்டுகளுக்கு முன் ஒரு காலை வேளையில் அவர் என்னைக் கண்டெடுத்தார்.

திருவல்லிக்கேணி, வெங்கடரங்கம் (பிள்ளை) தெருவில் ஒரு மாடி. அதன் உச்சியில், 'கார்க்கி - சிவப் பிலக்கிய மாத இதழ்' என்றொரு பெயர்ப்பலகை. உள்ளே தாழிடப்பட்ட அறைக்குள் தனியனாய் நான் 'கார்க்கி'யோடும், 'லெனி'னோடும், காகிதங்களோடும்...

கார்க்கி எழுதிய அக்டோபர் புரட்சி நாட்களின் நேர்முக வர்ணனையை மொழிபெயர்த்துக் கொண்டிருந்தேன். புரட்சியினால், மீட்கப்பட்ட மக்களின் வாழ்வில் 'தவாரிஷ்' - 'தோழர்' - என்கிற சொல் ஏற்படுத்திய நெகிழ்ச்சியையும் கிளர்ச்சியையும் அற்புதத்தையும் பற்றிய கட்டுரை அது.

"...துயருற்ற, துன்புற்றுக் குழம்பிய அந்நகரின் வாழ்வில், ஒளி வீசும் தாரகையாக, வருங்காலத்தை

"

மனிதன் அழகானவன்.
மானுடம் அழகானது.
மார்க்சியம் மனிதனை
மேலும்
அழகுபடுத்துகிறது.
அழகை, கலையை,
இசையை வெறுப்பவன்
பாஸிஸ்ட். அவர்
பாஸிஸத்தின் எதிரி!

"



படிப்பகம்

www.padippakam.com

முன்னறிவிக்கும் ஜோதியாக அந்த எளிய உள்ளமுருக்கும் சொல் ஒலித்தது..." இந்த வரிகளை எழுதி கொண்டிருந்தபோது 'காலிங்பெல்' இரண்டு முறை ஒலித்தது.

கதவைத் திறந்தேன்.

"வரலாமா?"

நான் நடந்தேன். வெளியில் நின்றவர் வந்தார். தனது புத்தகங்களுக்குள்ளிருந்து கடிதம் ஒன்றை எடுத்து நீட்டினார். வாங்கிப் பார்த்தேன்.

"அன்புள்ள தோழர்,

உங்களை நான் உடனடியாகச் சந்திக்க விரும்புகிறேன். எங்கள் அலுவலகத்திற்கு வரமுடியுமா? காத்திருக்கிறேன்.

அன்புடன்,

வி.பி.சிந்தன்."

கடிதத்தில் இவ்வளவுதான் எழுதப்பட்டிருந்தது. யார் இந்த வி.பி.சிந்தன்? இதுவரை நான் பார்த்தறியாத மனிதர். பரிச்சயமில்லாத பெயர். எதற்காக என்னைப் பார்க்க வேண்டும்? ஒவ்வொரு கம்யூனிஸ்ட்டும் இன்னொரு புதிய கம்யூனிஸ்ட் தோழரைப் பார்த்தால் சந்தேகிக்கிற அதே பார்வையில் நானும் யோசித்தேன்; "சி.ஐ.ஏ..."

எனது சந்தேகத்தைப் புரிந்து கொண்டு அவர் பேசினார்: "இதை எழுதியவன் நான்தான். வி.பி.சிந்தன். தபாலில் அனுப்பினால் தாமதமாகும் என்றுதான் நேரில் எடுத்துக் கொண்டு வந்தேன்."

இப்படித்தான் வி.பி.சி. எனக்கு அறிமுகமானார். கம்யூனிஸ்ட்டுகளுக்கு மத்தியில் எனக்குக் கிடைத்த 'முதல் வாசகர்' அவர். இப்படித்தான் பலமுறை என்னிடம் அவர் சொன்னார். அப்படி நடித்தார். உண்மையில் அவர் ஓர் இலக்கியப் பேராசான். அவரிடமிருந்து நான் கற்றுக் கொண்டவை அனேகம்.

நான் சந்தித்த கம்யூனிஸ்ட் தலைவர்கள் அனைவரிடமும் 'காந்தியத்தனம்' இருக்கவே செய்தது. இங்கே காந்தியத்தனம் என்று நான் குறிப்பிடுவது அந்த 'எளிமை' வேஷத்தை. அழுக்குப் பிடித்த சனியன்கள்! தங்களை ஏழைகளாகக் காட்டிக் கொள்வதற்காக இவர்கள் படாதபாடு பட்டார்கள்.

இவர்களுக்கு மத்தியில் வி.பி.சி. வித்தியாசமானவர். குளிக்காமலும் சட்டை மாற்றுவதற்குக்கூட நேரமில்லாமலும் புரட்சிக்காகவா காத்திருக்கிறாய்? வேண்டாம்; நீ குளிப்பதற்காகப் புரட்சியைக் கூடத் தள்ளி வைப்போம்" என்பார். அவர் ஓர் அரசியல்வாதி.

'கார்க்கி' முறியடிக்கப்பட்டு, இனி என்ன செய்வது என்கிற கேள்வி என்னை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த காலம், சாபக்கேடான நாட்கள்! அப்போது வி.பி.சி. தனது டிரைவர் தோழர் மாயாண்டியிடம் சொன்னார்:

"நம்மையெல்லாம் சந்திப்பதற்கு முன் இளவேனில் எப்படி இருப்பான் தெரியுமா? அழகும் சுறுசுறுப்புமாய் ஒரு மான் போலத் திரிவான். இப்போது பார், 'கம்யூனிஸ்ட் களை' வழிகிறது."

'கம்யூனிஸ்ட் களை' என்பது அருள்கெட்ட மூஞ்சி. அதை அவர் வெறுத்தார். மனிதன் அழகானவன். மானுடம் அழகானது. மார்க்சியம் மனிதனை மேலும் அழகுபடுத்துகிறது. அழகை, கலையை, இசையை வெறுப்பவன் பாஸிஸ்ட். அவர் பாஸிஸத்தின் எதிரி!

சி.ஐ.டி.யூ. என்பதைக் கவிஞர் தணிகைச்செல்வன் 'சிட்டு' என்பார். அந்தக் கவிதைப் பாங்கான வர்ணனையை அவர் ரசித்தார். கடுகடுத்த முகத்துடன் வரும் சி.ஐ.டி.யூ. தலைவர்களைப் பற்றிச் சொல்வார்:

"சிட்டு மூஞ்சி 'சிடு' மூஞ்சியாயிற்றோ?"

கடைசி நாட்களில் அவரைச் சந்திப்பதை நான் தவிர்த்தேன். அவரைப் பார்க்காத நாட்கள் எனக்குப் பாழான நாட்கள்தாம். ஆனாலும், எனக்கு நான் 'தண்டனை' விதித்துக் கொண்டேன். ஏனென்றால், வி.பி.சி. போன்ற ஒரு மனிதர் சட்டமன்றப் பிரமிடுகளுக்குள் தைலமிடப்படுவதை என்னால் சகிக்க முடியவில்லை. கட்சி அவரை எம்.எல்.ஏ ஆக்குவது என்று தீர்மானித்து விட்டது. இந்தச் சிதைக்குள் நுழைந்து எந்தச் சிதைவும் கருகாமல் வந்ததில்லை. அந்தக் கோலத்தில் என் தந்தையை நான் பார்க்க விரும்பவில்லை. என்னால் தடுக்கவும் ஏலாது. எனவே நான் வேதனையுடன் விலகிச் சென்று கொண்டிருந்தேன்.

பல கடிதங்கள் எழுதினார். மனதைக் கல்லாக்கிக் கொண்டு போகவில்லை. தோழர்களிடம் சொல்லி அனுப்பினார். போகவில்லை. ஒருநாள் அவரே வந்துவிட்டார். கட்சிப் பிரச்னைகளுக்கு அப்பால் மனிதர்களாய், தந்தையும் மகனுமாய்ப் பேசிக் கொண்டிருந்தோம். புறப்படும்போது சொன்னார்.

"கட்சி உன்னை அவமானப்படுத்தியிருக்கலாம். அலட்சியப்படுத்தியிருக்கலாம். ஆனால், அதற்காக நீ ஒரு 'ஆன்டி கம்யூனிஸ்ட்' ஆகிவிடக் கூடாது. அது இழிவானது..."

நான் சொன்னேன்: "உங்களில் யாரையும் தெரிவதற்கு முன்பே நான் கம்யூனிஸ்டாகத்தான் இருந்தேன். வாழ்க்கை என்னை அவ்வாறு வார்த்துவிட்டது. நான் கம்யூனிசத்துக்கு எதிராகத் திரும்புகிறேன் என்றால் வாழ்க்கைக்கு எதிராக - எனக்கே எதிராக - வாளை உருவுகிறேன் என்று அர்த்தம். அது நடக்காது. நான் வாழ்வை நேசிக்கிறவன். கட்சிக்கும் எனக்குமுள்ள இடைவெளி தவிர்க்க முடியாதுதான். அதற்காக நான் கம்யூனிசத்திலிருந்து விலகிச் செல்ல முடியாது. வேண்டுமானால், இவ்வாறு எண்ணிக் கொள்வேன்; தவறான மனிதர்களைக் கம்யூனிஸ்ட்டுகள் என்று நம்பி ஏமாந்து விட்டேனே..."

அவர் முகம் இறுகியது. பிறகு நிதானித்துக் கொண்டு 'நல்லது வருகிறேன்' என்றார்.

இதுதான் எங்கள் கடைசிச் சந்திப்பு. தொலைபேசியில் பேசிக் கொண்டதோடு சரி.

மாஸ்கோ செல்வதற்கு முதல் நாள் தொலைபேசியில் பேசிக் கொண்டோம்.

"நான் உன்னிடம் நிறைய எதிர்பார்க்கிறேன். எழுது. எழுதிக் கொண்டே இரு. சும்மா இராதே. நான் மாஸ்கோவிலிருந்து திரும்புவதற்குள் ஒரு புத்தகம் எழுதுவாயா?"

"முயற்சி செய்கிறேன்."

நான் எழுதத் தொடங்கியிருக்கும் புத்தகம் அவரது வாழ்க்கைச் சரிதம் என்பதை அவர் அறியாமலே போய்விட்டார்.

தந்தையே விடை பெறுகிறேன்!

**('25 வெண்மணித் தெரு' என்ற நூலிலிருந்து)**




படிப்பகம்

www.padippakam.com



# பாசிசத்தின் கோர வடிவங்கள்

ஒரு காலத்தில் தமிழகத்தில் சிறுபான்மையினர் யார் என்று கேட்டால், மக்கள் தொகையில் மூன்று சதவிகிதமாக இருக்கும் பார்ப்பனர்களைச் சிறுபான்மையினர் என்று தெரிவித்தார்கள். இன்றோ, சிறுபான்மையினர் என்றால் முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் என்று பட்டென்று கூறுகிறார்கள். அதுமட்டுமில்லை. மூன்று சதவிகிதமாக இருப்பவர்கள் கைபர், போலன் கணவாய் வழியாக வந்தவர்கள். ஆரியர்கள், அந்நியர்கள் என்ற கருத்தோட்டம் நிலவி இருந்தது. ஆனால், இந்தியாவே இந்துக்களின் நாடு, முஸ்லீம்கள் வேற்று நாட்டு மக்கள் என்ற கருத்து உருவாக்கும் வெற்றிகரமாக இப்போது நடந்தேறி வருகிறது.



உண்மையில் உள்நாட்டு மக்கள் மதம் மாறியிருந்தாலும் அவர்கள் பூர்வீக குடிகள்தாம். ஆனால் அவர்கள் இந்தியக் கலாச்சாரத்தை ஏற்காவிட்டால் நாட்டை விட்டு வெளியேறி விட வேண்டுமாம். இத்தகைய கருத்துக்களைப் பார்ப்பனர்கள் மட்டுமல்ல பார்ப்பனர் அல்லாதவர்களும் கூறத் தொடங்கியுள்ளனர். பார்ப்பன - பயங்கரவாதிகள் தொடர்ந்து செய்யும் பொய்ப் பிரசாரம், புனை கதைகள், வரலாற்றுத் திரிபுகளே இத்தகைய நிலைமையை உருவாக்கியுள்ளது.

மதவெறிக்கு எதிராக பெரியார் நடத்திய பிரசாரம் காரணமாகத் தமிழகத்தில் மதமோதல்கள் வெகு காலமாக நடைபெறவில்லை. அத்தகையதொரு மாநிலத்தில் இன்று ஜெயலலிதா, சோ.ராமசாமி, இராம.கோபாலன், இல.கணேசன் போன்றோர் முஸ்லீம் மக்களைத் தைரியமாக மிரட்டுகிறார்கள். இந்து வெறியைத் தூண்டி விடுகிறார்கள். பெரியார் பெயரில் உள்ள இயக்கங்களும் திராவிட அரசியல் கட்சிகளும் மதமயமாக்கும் இம்முயற்சிகளை எதிர்த்து தீவிர இயக்கங்கள் எதையும் நடத்தவில்லை. காங்கிரஸ், இடதுசாரிக் கட்சிகள் மதச்சார்பற்ற கட்சிகள் என்று கூறிக் கொண்டாலும் அவையும் பார்ப்பன பயங்கரவாதத்தைத் தோலுரித்துக் காட்டும் பணியைச் செய்ய முன்வரவில்லை.

இத்தகைய சூழலில் இந்து மத வெறிக்கு எதிராகக் கடுமையான தத்துவப் போராட்டம் தேவைப்படுகிறது. மற்றவர்களை விட நாத்திகர்களுக்கு இப்பிரச்னையில் பெரும் பொறுப்பு உள்ளது. இந்து மதவெறிக்கு வித்திடும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் தோற்றம் முதல் இன்று வரை அதன் செயல்பாடுகள், பாசிசக் கருத்தோட்டங்களைப் பட்டியலிட்டு ஒவ்வொன்றுக்கும் பதிலடி தர வேண்டிய தேவை எழுந்துள்ளது.

பார்ப்பனர்களின் மேலாதிக்கத்துக்கு அடித்தளம் அமைத்த

●●

கைவிரித்து வந்த
கயவர் நம்மிடை
பொய்விரித்து நம்
புலன்கள் மறைத்து
தமிழுக்கு விலங்கிட்டு
தாயகம் பற்றி
நமக்குள உரிமை
தமக்கென் பாரெனில்
வழிவழி வந்த உன்
மறத்தனம் எங்கே?

புரட்சிக் கவிஞர்

●●



படிப்பகம்

www.padippakam.com



மனுதர்மக் கருத்துக்களே பாசிசத் தன்மை கொண்டவைகள். அதன் வாரிசுகள் கௌடில்யர் இட்லர், இத்தாலிய மாக்கியவலி ஆகியோரின் வழியில் இன அழிப்புக் கொள்கைகளைப் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

ஆர்எஸ்எஸ் இயக்கத்தின் பிதாமகர் எம்.எஸ். கோல் வால்கர் 1939-ஆம் ஆண்டு எழுதிய இந்திய தேசத்தின் வரையறை என்ற நூல், பார்ப்பன பயங்கரவாதத்தின் 'பைபிளாகக் கருதப்படுகிறது. இந்தியா எப்போதுமே இந்து நாடாக இருந்து வந்துள்ளது என்று நிலைநாட்டுவதே இந்தப் புத்தகத்தின் நோக்கம். இந்துக்களாகிய நாம், இந்துஸ்தானத்தில் எந்தவிதத் தடங்கலும் இடைஞ்சலுமின்றி எட்டு முதல் பத்தாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வந்தோம். அதன்பின்தான் அந்நிய இனத்தவர்கள் படையெடுத்து வந்தனர். என்று கோல்வால்கர் கூறுகிறார். உண்மையில் இன்டஸ் நதிப்புறத்தில் வாழ்ந்தவர்களை வேறு நாட்டில் வசித்தவர்கள்

●●

**இந்திய நாடு அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் ஆர்எஸ்எஸ் அமைப்புக்குத் தேசப்பற்று இருந்திருக்குமானால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக் கடுமையான போராட்டத்தில் அது ஈடுபட்டிருக்கும். ஆனால் முஸ்லீம்களுக்கு எதிரான பிரச்சாரத்தைத்தான் அவர்கள் அப்போதும் செய்து வந்தார்கள்.**

●●

இந்துஸ்தான் நாட்டினர் என்று அழைத்தார்கள். அதை நிரூபிக்க ஏராளமான வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. இந்துக்களையும் ஆரிய இனத்தையும் ஒரே அர்த்தத்தில் கோல்வால்கர் குறிப்பிடுகிறார். இன் மூலம் ஆரிய இனம் வெளிநாட்டிலிருந்து வந்ததல்ல என்கிறார். ஆரிய இனம் வெளியிலிருந்து வந்த இனம் என்ற கூறுபவர்கள் மேற்கத்திய அறிஞர்களின் ஆதரவாளர்கள் என்று கோல்வால்கர் முத்திரை குத்துகிறார்.

இந்த புத்தகத்தின் அட்டையில் உள்ள வரைபடம் ஆப்கனிஸ்தான் தொடங்கி பாகிஸ்தான், பர்மா, இலங்கை ஆகிய பகுதிகளும் இந்தியாவின் பகுதிகளாகச் சித்திரிக்கிறது. இந்து ராஷ்ட்ரம் அமைக்க வேண்டும் என்று அந்த நூல் கூறுவதன் மூலம் இந்து மதத்தை ஏற்காத ஜைன மதத்தினர், சீக்கியர், முஸ்லீம்கள் கிறிஸ்தவர்களை இந்தியர்கள் இல்லை என்ற தெரிவிக்கிறது. இந்தியாவில் எத்தனையோ மதம் தோன்றியிருந்த போதிலும் இந்து மதத்திற்குத்தான் இங்கு இடம் என்ற கருத்தை வலியுறுத்தும் அந்தப் புத்தகம், குறிப்பாக முஸ்லீம்களை வெளிநாட்டினர் என்று தெரிவித்து இந்து தேச வெறிக் கருத்தை கட்டமைக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

**வாக்காளர் பட்டியலைக் கையில் வைத்துக் கொண்டு முஸ்லிம்களின் வீடுகளைத் தாக்கியது சிவசேனை என்று ஸ்ரீகிருஷ்ணா கமிஷன் சுட்டிக் காட்டியுள்ளது.**

இட்லருக்கு கோயபல்ஸ் என்ற கொள்கை பரப்பு மந்திரி இருந்தார். மிகப்பெரிய பொய்களைச் உண்மையைப் போல் தெரிவிப்பதில் கோயபல்ஸ் வல்லவர். பொய்யைத் திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலம் அது உண்மை என்று ஏற்கப்பட்டு விடும் என்ற வழிமுறையைக் கோயபல்ஸ் பின்பற்றினார். அவரது வழியில்தான் மீண்டும் மீண்டும் இந்தியா இந்துக்களின் நாடு என்ற பிரசாரம் தொடர்ந்து நடந்து வருகிறது.

இந்திய நாடு அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் ஆர்எஸ்எஸ் அமைப்புக்குத் தேசப் பற்று இருந்திருக்குமானால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக் கடுமையான போராட்டத்தில் அது ஈடுபட்டிருக்கும். ஆனால் முஸ்லீம்களுக்கு எதிரான பிரச்சாரத்தைத்தான் அவர்கள் அப்போதும் செய்து வந்தார்கள். தேச விடுதலைப் போராட்டத்திலிருந்து ஆர்எஸ்எஸ் விலகி நின்றது. அதாவது பார்ப்பனியத்திற்குப் பிரிட்டிஷ் ஆட்சிதான் பாதுகாப்பு அளிக்கும் என்று ஆர்எஸ்எஸ் நம்பியது. பொதுவான அனைத்து மக்களின் ஜனநாயகப் போராட்டம் நாளை பார்ப்பனிய மேலாதிக்கத்துக்கு எதிராகத் திரும்பிவிடக் கூடாதல்லவா?



"முஸ்லீம் அரசர்களால் இந்து தேசத்திற்குத் தொடர்ந்து பாதிப்பு ஏற்பட்டு வந்தது. வஞ்சிக்கப்பட்ட இந்து தேசம் மீண்டும் ஏற்பட முஸ்லீம்களுக்கு எதிராக கிளம்ப வேண்டும்'' என்ற பொய்யான கருத்தைத்தான் ஆர்எஸ்எஸ் பரப்பியது. பிரிட்டிஷ்காரரர்களின் சேவகனாகவே பார்ப்பனியம் செயல்பட்டுச் சலுகைகளைப் பெற்றது.

அவர்களைப் பொறுத்தவரை வெள்ளைக்காரரர்கள் கொள்ளைக்காரரர்கள் அல்ல; நெருங்கிய சொந்தக்காரரர்கள்.

வெள்ளையனே வெளியேறு இயக்கம் 1942 ஆகஸ்டில் நடந்த போது ஆர்எஸ்எஸ் எப்படிச் செயல்பட்டது என்பதை பம்பாய் அரசாங்கத்தின் உள்துறை விளக்கியுள்ளது. அதாவது "ஆர்எஸ்எஸ் சட்டத்தை உண்மையுடன் பின்பற்றியது. எந்த வித அசம்பாவிதச் செயலிலும் ஆர்எஸ்எஸ் ஈடுபடவில்லை'' என்ற நற்சான்றிதழ் வழங்கியுள்ளது. தங்கள் லட்சியத்தை அடைய இடையூறாக இருக்கும் இயக்கமாகவே காங்கிரசை ஆர்எஸ்எஸ் பார்த்தது. 1931-இல் நடந்த கராச்சி காங்கிரசில் இந்தியா ஒரு மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசாகத் திகழும் என்று அறிவிக்கப்பட்டது. முஸ்லீம்களுக்கும் சமத்துவம் தரும் வகையிலான காங்கிரசின் கருத்துக்களை ஆர்எஸ்எஸ் வன்மையாக எதிர்த்தது. காங்கிரசுக்கு எதிராக விரோதத்தை ஆர்எஸ்எஸ் வளர்த்தது. இதன் ஒரு விளைவாகவே நாட்டுப் பிரிவினையின் போது மகாத்மாகாந்தியை, இந்து மத வெறியன் நாதுராம் கோட்சே சுட்டுக் கொன்றான். ஆர்எஸ்எஸ் அமைப்பின் முன்னாள் உறுப்பினரான கோட்சே இந்து தேசியவாதியாகவே இருந்தான். முஸ்லீம்கள் கொல்லப்படுவதற்கு எதிராகக் காந்தி கருத்துக் கூறிவந்ததைஎதிர்த்து ஆர்எஸ்எஸ் அப்போது தீவிரப் பிரச்சாரம் செய்து வந்தது.

காந்தி கொல்லப்பட்டது குறித்து ஆர்எஸ்எஸ் அமைப்பின் முக்கியத் தலைவர் ராஜேந்திர சிங் கருத்துக்கூறுகையில் கோட்சேயின் நோக்கம் நல்ல நோக்கம், ஆனால் தவறான வழிமுறையை அவர் தேர்ந்தெடுத்து விட்டார் என்று தெரிவித்தார். கோட்சே ஆர்எஸ்எஸ்காரர் அல்ல என்று தெரிவித்து விட்டுத் தனது ஆதரவையும் அனுதாபத்தையும் இந்த வகையில் அவர் மறைமுகமாகக் காட்டியுள்ளார். ஆர்எஸ்எஸ் கிளப்பிய மதவெறி காரணமாகக் காந்தி கொல்லப்பட்டார் என்ற நிலையில்இரண்டு ஆண்டுகள் ஆர்எஸ்எஸ் இயக்கம் தடை செய்யப்பட்டது.

ஆர்எஸ்எஸ் அமைப்பு காங்கிரசைவிடக் கம்யூனிஸ்டுகளைப் பரம விரோதிகளாகப் பார்த்தது. தடைசெய்யப்பட்ட சமயத்தில் ஆர்எஸ்எஸ் ஸ்தாபகர் கோல்வால்கர் நேருவுக்கு ஒரு கடிதம் எழுதினார். "ஆர்எஸ்எஸ் அமைப்பைத் தடை செய்து விட்டதால் புத்திசாலியான இளைஞர்கள் கம்யூனிஸ்டுகளின் வலையில் விழுந்து வருகிறார்கள். ஏனென்



படிப்பகம்

www.padippakam.com

றால், கம்யூனிசம் செல்வாக்குப் பெறுவதற்குப் பலமான தடையாக இருந்து வந்த ஆர்எஸ்எஸ் தற்போது செயல்பாட்டில் இல்லை" என்று அதில் தெரிவித்துள்ளார்.

இத்தகைய குணங்களைக் கொண்ட ஆர்எஸ்எஸ் இயக்கம் நாக்பூரில் 1925-ஆம் ஆண்டு உருப் பெற்றது. அந்த ஊரில் முஸ்லிம்களை எச்சரிக்க லத்தியுடன் ஆர்எஸ்எஸ் ஊர்வலத்தை நடத்தியது. அன்று தொடங்கி இன்று வரை ஆர்எஸ்எஸ் உறுப்பினர்கள் ஆயுதப் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆர்எஸ்எஸ் அமைப்பின் உறுப்பினர் எண்ணிக்கையை வெளிப்படுத்த அந்த அமைப்பு தயாராக இல்லை. 1998-ஆம் ஆண்டு வாக்கில் நாடு முழுவதும் 40,000 ஆர்எஸ்எஸ் கிளைகள் இருந்ததாகத் தெரியவந்துள்ளது. பள்ளிகள், கலாச்சார ஸ்தாபனங்கள், பக்தி அமைப்புகளில் ஊடுருவி ஆர்எஸ்எஸ் தன் எல்லையை வேகமாக விரிவுபடுத்தி வருகிறது.

இந்த ஆர்எஸ்எஸ் அமைப்பில் பயிற்சி பெற்று வளர்ந்தவர்கள்தாம் பெரும்பாலும் அதாவது 75 சதவிகிதத்திற்கும் அதிகமானவர்கள்தாம் பாரதிய ஜனதா கட்சியில் முக்கியப் பொறுப்புகளில் உள்ளனர். வாஜ்பாய், அத்வானி, ஜோஷி ஆகிய அனைவரும் ஆர்எஸ்எஸ் இயக்கத்தவர்களே. 1977-இல் ஜனதா இயக்கத்தில் ஐக்கியமான பாரதிய ஜனசங்கம் ஆர்எஸ்எஸ் அமைப்புடன் இருந்த தொடர்பைத் துண்டித்துக் கொள்ளவில்லை. இந்த இரட்டை உறுப்பினர் பிரச்னை எழுந்தபோது ஆட்சியில் இருப்பதைவிட ஆர்எஸ்எஸ்ஸில் உறுப்பினராக இருப்பது முக்கியம் என வெளியேறியவர்கள்தாம் பின்னர் பாரதிய ஜனதா கட்சியை உருவாக்கினார்கள்.

நடுத்தர வர்க்கத்தின், சிறு வணிகர்கள், அரசு அதிகாரிகள், ஊழியர்கள், என பல்வேறு தரப்பினரையும் ஆர்எஸ்எஸ் ஈர்த்து வருகிறது. முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களுக்கு எதிரான சகிப்பின்மையை நாள்தோறும் வளர்த்து வருகிறது. இட்லரின் வழியில் கோல்வால்கர் சொன்ன கருத்துக்களை ஆர்எஸ்எஸ் பரப்புகிறது. அதாவது "ஜெர்மனி நமக்கு வழிகாட்டுகிறது. அடிப்படையிலேயே மாறுபட்ட இனங்கள், கலாச்சாரங்கள் ஒன்றுபட்டு வாழ முடியாது. ஒன்றை ஒன்று கிரகித்து ஒன்றுபடவும் முடியாது" என்கிறது ஜெர்மனி. இந்துஸ்தானத்தில் உள்ள நமக்கு நல்ல பாடத்தை அது தருகிறது என்கிறார் கோல்வால்கர்.

ஆர்எஸ்எஸ் அமைப்பைவிட மோசமான பாசிச சக்தியாக விளங்கும் சிவசேனாவின் தலைவர் பால் தாக்கரே, முஸ்லிம்கள் தேசியமயமாக வேண்டும் என்று எச்சரிக்கை விடுத்து வருகிறார். ராமர் கோயில் இயக்கத்தின் மூலம் பாபர் மசூதி இடிக்கப்பட்ட பின்னர் நாடு முழுவதும் 3000 பேர் கொல்லப்பட இந்து வெறி அமைப்புகள் காரணமாக இருந்தன. இதில் குறிப்பாக, வாக்காளர் பட்டியலைக் கையில் வைத்துக் கொண்டு முஸ்லிம்களின் வீடுகளைத் தாக்கியது சிவசேனை என்று ஸ்ரீகிருஷ்ணா கமிஷன் சுட்டிக் காட்டியுள்ளது. நாஜிக்கள் 1930களில் யூதர்களின் வீடுகளைத் தாக்குவதற்கு முன்பு அவர்களின் வீடுகள் ஸ்வஸ்திக் சின்னத்தால் குறிக்கப்பட்டது என்பது நினைவுகூரத்தக்கது.

குஜராத்தில் தற்போது முஸ்லிம்கள் குறிவைத்துத் தாக்கப்படுகின்றனர். குஜராத்துக்குச் சென்று முஸ்லிம்களை அகதிகள் முகாம்களில் சந்தித்த பிரதமர் வாஜ்பாய், ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லிவிட்டுத் திரும்பியுள்ளார். சி.பி.ஐ. விசாரணையோ வேறுவித நடவடிக்கையோ எடுக்கப்படவில்லை. இந்து மதவெறியர்கள் வாஜ்பாய் வந்து சென்ற அடுத்த நாளிலும், வன்முறையில் ஈடுபட்

••

அரசு ஊழியர்கள் ஆர்எஸ்எஸ் இயக்கத்தில் சேரலாம் என்று 1998–இல் குஜராத் அரசு ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டது. இந்த



அறிக்கை தொடர்பாக நாடாளுமன்றத்தில் எதிர்ப்புக் கிளம்பியதை அடுத்து அந்த அறிக்கை வாபஸ் பெறப்பட்டது. எனினும் உரிய சமிக்ஞை அனுப்பப்பட்டு விட்டது.

••



படிப்பகம்

www.padippakam.com

டுள்ளனர்.

இந்நிலையில் அரசு ஊழியர்கள் ஆர்எஸ்எஸ் இயக்கத்தில் சேரலாம் என்று 1998-இல் குஜராத் அரசு ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கை தொடர்பாக நாடாளுமன்றத்தில் எதிர்ப்புக் கிளம்பியதை அடுத்து அந்த அறிக்கை வாபஸ் பெறப்பட்டது. எனினும் உரிய சமிக்ஞை அனுப்பப்பட்டு விட்டது.

குஜராத் போலீஸ் துறையில் உயர் அதிகாரிகள் முதல் கீழ்நிலை வரை இந்து மதவெறியர்கள் ஊடுருவி உள்ளனர். அவர்களுக்கே பதவி உயர்வுகள் அளிக்கப்படுகின்றன. பொதுவாக நாட்டில் ஓய்வு பெற்றுவரும் உயர் ராணுவ அதிகாரிகள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள்கூடப் பாரதிய ஜனதா கட்சியில் சேருகிறார்கள். கவர்னர்களாக, ஆர்எஸ்எஸ்காரர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

இத்தகைய போக்கு நிலவும் சூழலில் பள்ளிப் பாடத்திட்டத்திலும் பல்கலைக் கழக பாடத் திட்டத்திலும் ஆர்எஸ்எஸ் கருத்துக்கள் விதைக்கப்படுகின்றன. கல்வி காவிமயமாக்கப் படுகிறது.

இப்போக்கு தொடருமானால், எதிர்கால சந்ததியே மதவெறிப் பாசிஸ்டுகளாக மாறும் அபாயம் உள்ளது. எல்லா நவீன விஞ்ஞான கண்டுபிடிப்புகள் பற்றியும் வேதங்கள் முன்கூட்டியே சொல்லிவிட்டன என்பது உள்ளிட்ட ஏராளமான பொய்களைப் பாடத் திட்டம் மூலம் பார்ப்பனர்கள் கட்டவிழ்த்து விடுகிறார்கள்.

ஆர்எஸ்எஸ் இயக்கம் சொல்லிவரும் பொய்களில் முக்கியமானது முஸ்லிம்கள் மக்கள் தொகை பற்றியது. முஸ்லிம்கள் தொடர்ந்து பெருகிவருவதை அனுமதித்தால் இது முஸ்லிம் நாடாக மாறிவிடும் என்கிறார்கள். இந்துக்களின் மக்கள் தொகை வளர்ச்சி 2.6 சதவீதம் என்றால், முஸ்லிம்களின் மக்கள் தொகை வளர்ச்சி மூன்று சதவீதமாக உள்ளது. படிப்பறிவின்மை மட்டுமின்றி வேறு சமூகக் காரணங்களும் இத்தகைய நிலைமைக்குக் காரணம். இதை மாற்ற



எதுவும் செய்யாதவர்கள் முஸ்லிம் மக்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்ய நிலைமையைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

இடஒதுக்கீட்டை ஆர்எஸ்எஸ் அமைப்பு கடுமையாக எதிர்க்கிறது. பார்ப்பனர்களின் கூடாரத்திலிருந்து வேறு எதை எதிர்பார்க்க முடியும்? இதை உணராத பிற்பட்ட சாதியினரும் ஆர்எஸ்எஸ் மயக்கத்தில் உள்ளனர். சாதி அமைப்பைத் தொடர்ந்து நீடிக்கச் செய்வதன் மூலம் மேலாதிக்கத்தைத் தொடரவே பார்ப்பனியம் விழைகிறது. வெறும் கண்மூடித்தனமான இந்து ராஷ்ட்ர ஆசை, பார்ப்பன நலன் தவிர ஆர்எஸ்எஸ் அமைப்புக்கு வர்க்க நலன் எதுவும் இல்லையா?

பெருகிவரும் தாராளமயம், தனியார் மயம், உலகமயத்தினால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை மூடி மறைக்கவும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு - ஏகாதிபத்தியத்திற்குச் சேவை செய்யவும் இந்து நாடு கோரிக்கை உதவுகிறது.

ஜனநாயக உரிமை, மனித உரிமை, வாழ்வுரிமை, தொழிற்சங்க உரிமை உள்ளிட்ட பல அடிப்படை உரிமைகளுக்கு எதிராக மத்திய அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் கொண்டு வந்துள்ளது. கருத்து ரீதியான பாசிசமும் அரச பயங்கரவாதமும் இன்று மக்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. இதை முறியடிக்கத் தீவிரமான கருத்துப் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. வெற்றியடையப் போவது பார்ப்பனிய பயங்கரவாதமா? தோல்வியடையப் போவது மனித நேயமா? ●



படிப்பகம்

www.padippakam.com

# செம்பரிதி

எங்கிருந்தோ ஒரு மரத்தின் கிளையிலிருந்து உதிர்ந்து மிதந்து வந்து அவர் அருகில் விழுந்தது பழுத்த இலை ஒன்று. சித்திரை மாதப் பகல் நேரத்தின் உக்கிரம் பொறுக்காமல் உடல் கசகசத்தது. உச்சிப் பொழுதின் மௌனத்தில் மூர்ச்சித்துக் கிடந்த தெருவின் கடைக் கோடியில் நின்றிருந்த கொன்றை மரத்தில் இருந்து வந்த காக்கைகளின் ஒலி மட்டும் அவ்வப்போது பூமி இன்னும் உயிர்த்துக் கிடக்கிறது என்பதை அடையாளப் படுத்திக் கொண்டிருந்தது.

மாயாண்டிக் கிழவனின் கவனத்திலிருந்து எதுவும் தப்பி விடுவதில்லை. அவருடைய அவயவங்கள் மிகத் துல்லியமாகவே உலகத்தை அவருக்குக் கொண்டு சேர்த்தன.

ரொம்ப நேரத்துக்குப் பிறகு ஒரு மனித உருவம் தெருவில் நடந்து போவது தெரிந்தது. மாயாண்டிக் கிழவர் உட்கார்ந்திருக்கும் திண்ணையை நெருங்கியதும் அது வேகமாய் நடையைப் போடுவதும் அவருக்கு நன்றாகவே தெரிகிறது. "அங்க போறது யாரு..."

கேட்க நினைத்தும் ஏனோ முடியவில்லை.

ஒரு நாளைக்கு எத்தனையோ கேள்விகள்... இப்படி அடிவயிற்றில் பிறக்கும் போதே செத்துப் பிணமாகி வெறும் பெரு மூச்சாய் வெளியேறி விடுவதுண்டு.

பத்துப் பதினைந்து வருஷங்கள் இருக்கும். அவர் எதிரில் ஒரு மனிதன் உட்கார்ந்து பேசி... தன் பேரன் பேத்திகள் இல்லை, இல்லை... கொள்ளுப் பேரன் பேத்திகள்... அவரை உயிருள்ள ஒரு ஜீவனாகவே மதிப்பதில்லை. தட்டைச் சரட்டி விடும் சத்தம் சாப்பாடு வந்துவிட்டதற்கான அறிவிப்பு. 'நங்' என்று அருகில் ஏதாவது சத்தம் கேட்டால் குடிக்க ஏதோ வைத்திருக்



கிறார்கள் என்று அர்த்தம்.

அவருக்குக் கண் நன்றாகத் தெரியும். காது நன்றாகக் கேட்கும். வாய் நன்றாகப் பேச வரும். ஆனாலும், இது மூன்றுமே அவருக்குச் சமீப கால மாகத் தேவைப்பட்டதில்லை.

மாயாண்டிக் கிழவனின் மகன் இருந்தவரை அவருக்கு மவுசு குறையவில்லை.

மகன் செத்தபோது அவனுக்கு வயது எழுபத்தைந்து. இவர் அப்போதே நூறைக் கடந்து விட்டதாக ஊருக்குள் பேச்சு. இப்போது அவருடைய கொள்ளுப் பேரனுக்கே இருபது வயதுக்குமேல் இருக்கும். நிர்த்தாட்சண்யமாக யாரையும் உதிர்த்து விட்டுப் போகும் காலம் இவரை மட்டும் ஏனோ இன்னும் தூக்கிச் சுமந்து கொண்டிருந்தது.

அவருக்கு என்ன வயது என்று அவருக்கே துல்லியமாகத் தெரியாது. "இருபது வயசாச்சு பயலுக்கு. இனியும் காலங் கடத்தப்புடாது" என்று சொல்லி அவருடைய தகப்பனார் பக்கத்து ஊரில் அவருக்கு அவசர அவசரமாக ஒரு பெண்ணைப் பார்த்துக் கட்டிவைத்த சம்பவம் மட்டும் இன்னும் பசுமையாக நினைவிருக்கிறது.

தன் கல்யாண காலத்து நினைவு வந்ததும் அவருடைய கை தன் தலையணைக்குப் பக்கத்தில் சுவரோரமாகக் கிடந்த புல்லாங்குழலைத் தேடியது.

சிறிது நேரத் தடுமாற்றத்துக்குப் பிறகு தன் கைக்குள் சிக்குண்ட அதை எடுத்து மெல்லத் தடவிப் பார்த்தார்.

அதன் துளைகளின் வழியே ஊடுருவிய மெல்லிய காற்றில் ஈரம் காயாத கடந்தகாலம் விரல்களின் ஊடாய் அவருக்குள் புகுந்து உயிரில் சில்லிட்டது.

அந்த ஊரின் மனிதர்கள் மட்டுமல்ல ஆடு, மாடு, குளம், குட்டை, மரம், செடி, கொடி என்று அனைத்தும் மாயாண்டியின் குழலோசைக்குள் கட்டுண்டு கிடந்த காலம் ஒன்று இருந்தது. ஆறடி உயரமும் செதுக்கிய உடற்கட்டுமாய் வளைய வந்த இளம் பிராயத்து மாயாண்டியிடம் ஊர் மயங்கிக் கிடந்தது.

அவன் கம்பெடுத்துக் கால் சுழற்றாத அக்கம் பக்கத்துத் திருவிழாவே இல்லை. மாடு மேய்க்கிறபோது புல்லாங்குழல் என்றால் மாலை மயங்கும் நேரங்களில் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு விடுகதை



படிப்பகம்

www.padippakam.com

# காலக் கிழவன்



போடுவதும், கதை சொல்வதும் பாட்டுப்பாடுவதுமாய் இளசுகள் சூழக் கொட்ட மடிப்பான்.

இப்படியான நிலையில்தான் மாயாண்டிக்கு வெள்ளையம் மாளைத் தேடிக் கட்டிவைத் தார்கள். அள்ளிச் செருகிய அடர்ந்த கேசமும், ரவிக்கை இல் லாமல், கண்டாங்கிச் சேலையில் துடுப்புப் போடும் இடுப்புமாய் கைவீசி நடக்கும் அவளிடம் சுத்த மாய்ச் சொக்கிக்கிடந்த மாயாண் டிக்கு வெள்ளையம்மாள் மிடுக் கான துணையானார்.

ஊர்ப் பெண்டுகளெல்லாம் வாழ்க்கைப்பட ஏங்கிய மாயாண்டி யின் வாழ்க்கை இப்போது தன் கொசுவத்தில் என்ற கர்வம் அவள் கைவீச்சில் தெரிந்தது.

காலப் போக்கில் மாயாண்டி ஊரில் முக்கியப் புள்ளியானான். மாயாண்டியின் பேச்சுக்கு மறு பேச்சில்லாமல் ஊர் கிடந்த தற்குக் காரணம் இருந்தது.

அவன் கையில் கம்பு சுழல்வதைப் போலவே வாயில் வார்த்தையும் வசீகரமாய்ச் சுழ லும். எதையும் ஆணித்தரமாக அடித்துப் பேசும் பழக்கம் உள்ளவன். ஒருகாலை மடக்கி இன்னொரு கால் மேல் போட்டுக் கொண்டு அவன் பேசிய நியாயங்களை ஊர் மெய்ம்மறந்து கேட்டுக் கிடக்கும். தான் ஏட்டுப்படிப்பாய்ப் படித்த பழைய சங்கதிகளையெல்லாம் மூச்சு விடாமல் சொல்லும்போது பிற்காலத்தில் பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள்கூட வாய்பிளந்து கேட்டு நிற்பார்கள். ஏறக்குறைய எழுபது வருஷம் அந்த ஊர் அவனைச் சுற்றியே சுழன்றது.

காலத்தின் கிரமமான பயணத் தில் மாயாண்டி மெல்லத் தன்னை யறியாமல் கரையொதுங்கி இருந் தான்.

திடீரென்று ஒருநாள் திரும்பிப் பார்க்கும்போது நீண்ட மௌனம் தன்னைப் பின் தொடர்ந்தது. தன் னோடு வாழ்ந்த, பேசிய, பழகிய, எந்த முகமும் தென்படவில்லை. தன் பிள்ளை பெற்ற பிள்ளை களிடம்கூடத் தன்னைப் பற்றிய எந்தப் பிரதிபலிப்பும் இல்லை.

ஓர் ஒற்றை மனிதனாய் பூமியின் ஏதோவொரு விளிம்பில் நிற்பது போல் இருந்தது. உதடுகள் பிரித்து, வார்த்தைகளை உச்சரித்து வரு ஷங்கள் பல கடந்தன. இப்போ தெல்லாம் தன் சுவாச மூச்சே தன்னிடமிருந்து வருவதுபோல் தெரியவில்லை.

தன்னை நோக்கிய ஒற்றைச் சொல்லுக்காகத் தவமிருந்து கொண்டிருந்த மாயாண்டிக் கிழ வனின் மனசுக்குள்ளிருந்த நினை வுச் சாளரங்கள் ஒவ்வொன்றாய்த் தங்களை மெல்ல மூடிக் கொண்டன.

இப்போது முழுக்க இருள். எவ் வளவு துழாவியும் கடந்த காலத் தின் கதவுகள் தட்டுப்படவில்லை. உலகமே இருண்ட அறையாய் மனிதர்கள் ஏதுமில்லாத வெட்ட வெளி வனாந்திரமாய் அவனைப் பய முறுத்தியது.

திண்ணையிலிருந்து வீட்டுக் குள் போய்ப் பல வருஷங்களாச்சு. வீட்டுக்குள் அவனுக்கான யாரு மில்லை. தான் அவர்களுக்கு எத் தனாவது தலைமுறைத் தாத்தன் என்பதே அவர்களுக்குத் தெரி யாது. இதில் ஆச்சரியம் மாயாண் டிக் கிழவன் இன்னும் ஊருக்குள் ளும், காடுகரையிலும் தினமும் நடந்து போய்ச் சுற்றி வருவது தான். தன் உயிர் இன்னும் உடலில் இருக்கிறது என்பதை அதை வைத் துத்தான் அடையாளப்படுத்திக் கொள்கிறார்.

ஒருவகையில் காலம் அவ ருக்குக் கொஞ்சம் கருணை காட்டி இருந்தது. ஊர்ப் பஞ்சாயத்துக் கூடும், பழைய புளியமரம், மணிக் கணக்காய்க் குழல் ஊதித் தனை மறந்திருக்கும் வயல் வெளிகள் வாய்க்கால் வரப்புக்கள், இக் கரையிலிருந்து அக்கரை வரை நீந்திய கண்மாய் குளங்கள் இவை மட்டும் இன்னும் இருந்தது. தன் சமகால மனிதர்களை எந்தத் தயவுமின்றிப் பறித்துக் கொண்ட காலத்தின் இந்தக் கருணை மாயாண் டிக் கிழவனுக்குப் பெரிய ஆறுதல்.

இன்றைக்குப் பொழுது விடிந் ததில் இருந்தே மாயாண்டிக் கிழவனின் நடவடிக்கை யில் மாற்றம் இருந்தது. காலையில் எழுந்ததில் இருந்து பலமுறை வீட்டுக்குள் திரும்பித் திரும்பி எட்டிப் பார்த் துக் கொண்டே இருக் கிறார். ஒரு காலத்தில் கூத்தும் கும்மாளமு மாய்க் கிடந்த திண் ணையில் அவரைச் சுற்றிச் சூழ்ந்திருந்த மௌனத்தை இன்று எப்படியும் விரட்டி விடுவது என்பது போல இருந்தது அவர் நட வடிக்கை. மெல்ல எழுந்து வீட்டுக் குள் காலடி எடுத்து வைத்தார். உள்ளே தொலைக்காட்சியில் ஞாயிற்றுக்கிழமைப் படம் ஓடிக் கொண்டிருந்தது.

"புள்ளையளா... யாரது... இங்கே கொஞ்சம் வாங்களே..."

பல வருஷங்களுக்குப் பிறகு வலிந்து சிரமப்பட்டுப் பிறந்த வார்த்தைகளை அப்படியே பிர சவித்தார் கிழவர். யாருமே கவ னிக்கவில்லை. மீண்டும்... மீண்டும்... கூப்பிட்டார். மாயாண்டிக் கிழ வனுக்கு இன்று பிடிவாதம் இறு கியது. எப்படியும் யாரோடாவது பேசியே தீருவது என்று. பலமுறை கிழவனின் குரல் செய்த தொந்தரவு பொறுக்காமல்.



படிப்பகம்

www.padippakam.com



"யோவ்.... பெரிசு... சும்மாகிட படம் பார்த்துக்குனு இருக் கோம்ல" என்று ஒரு குரல் சுரீ ரெனப் பாய்ந்தது பதிலுக்கு.

உள்ளுக்குள் ஒரு கதவு டப் பென்று மூடிக்கொண்டது கிழவ னுக்கு. திரும்பத் திண்ணையில் உட்காரப் பொறுக்காமல் மெல் லத் தெருவில் நடந்து ஊருக்கு வெளியில் பஞ்சாயத்துக் கூடும் புளியமரத்தை நெருங்கினார். மெல்ல நிமிர்ந்து அதன் தணிந்த கிளையொன்றைப் பார்த்தபடி நின்றார்.

பலவருஷங்களுக்குப் பிறகு அன்றைக்கு ஊரெங்கும் மாயாண டிக் கிழவனின் பேச்சாக இருந்தது. காலையில் கண்மாய்க் கரைப் பக்கமாய்ச் சென்றவர்கள் பார்த்து அலறிய காட்சிதான் அதற்குக் காரணம்.

நூற்றிப்பத்து வயதான மாயாண டிக் கிழவன் அந்தப் பஞ்சாயத்துப் புளியமரத்தின் கிளையொன்றில் தூக்கில் தொங்கிக் கொண்டிருந் தார். கீழே அவருடைய புல்லாங் குழல் அனாதையாய்க் கிடந்தது.●



படிப்பகம்

www.padippakam.com




விடுதலை அச்சகத்தில் வேலை செய்து கொண்டிருந்த 'கம்பாசிட்டர்' ஒருவரின் மகளை 'கல்கி' அச்சகத்தில் 'கம்பாசிட்டராக' இருந்த இளைஞர் ஒருவருக்கு குருசாமியின் சிபாரிசின் பேரில் திருமணம் செய்து வைக்கப் பட்டது. அந்த மாப்பிள்ளை 'விடுதலையில்' முக்கியமான 'கம்பாசிட்டர்' என்பது கல்கி அலுவலகத்திற்குத் தெரியாது.

அந்த மாப்பிள்ளைக்குக் 'கல்கி'யில் கொடுத்த சம்பளம் போதவில்லை. மேலும், சுயமரியாதைக்காரராக இருந்ததினால், 'கல்கி'யில் தொடர்ந்து வேலை செய்யவும் விருப்பமில்லை.

எனவே வேலையை விட்டு விலகி, இரண்டு மூன்று எருமை மாடுகள் வாங்கிப் பால் வியாபாரம் செய்ய விரும்பினார். இந்த எண்ணத்தை 'விடுதலை'யில் வேலை செய்யும் தனது மாமனாரிடம் கூறினார். மாமனாருக்கு அது பிடிக்கவில்லை; எருமைமாடு வளர்ப்பதைக் கேவலமாக எண்ணினார்.

ஒருநாள் குருசாமியிடம் 'விடுதலை' கம்பாசிட்டர், "அய்யா தாங்கள் பார்த்த மாப்பிள்ளை எருமை வளர்க்க வேண்டுமென்றும், அதனால் வரும் பால் வருமானத்தைக் கொண்டு குடும்பம் நடத்தப்போவதாகக் கூறுகிறார். ஆனால், அது எனக்குக் கேவலமாகத் தெரிகிறது" எனவும் "தாங்கள் தான் அவரைக் கூப்பிட்டுப் புத்தி சொல்ல வேண்டும்" என்றார்.






அப்போது அடுத்த அறையில் தலைவர் பெரியாரும் இருந்தார்.

"எருமை வளர்ப்பது கேவலம்" என்று சொன்னது குத்தூசியாருக்குப் பிடிக்கவில்லை, மேலும் பெரியாரையும் கிண்டல் செய்ய எண்ணினார்! குத்தூசியார் கம்பாசிட்டரிடம் கூறியது:

எருமை வளர்ப்பது கேவலம் அல்ல! ஒரு எருமை மாட்டின் வருமானம் நமது அலுவலகத்தில் வேலை செய்யும் எழுத்தரின் சம்பளத்தைவிட அதிகமானது! இரண்டு எருமையின் வருமானம் கம்பாசிட்டர் சம்பளத்தைக் காட்டிலும் கூடுதலாகும்!

மூன்று எருமையின் வருமானத்தை விட நமது மானேசரின் சம்பளம் குறைவு!

நான்கு எருமையின் வருமானம் 'விடுதலை' ஆசிரியரின் ஊதியத்தை விட அதிகம்!

அய்ந்து எருமையின் வருமானம் நமது தலைவரின் வருவாய்க்குச் சமமாகும்! அப்படிப்பட்ட தொழிலையா கேவலம் என்கிறீர்கள்" என்று சொன்னபோது, குபீர் என்று சிரிப்புச் சத்தம் கேட்டது! சிரிப்புச் சத்தம் கேட்ட திசையை நோக்கினால் அங்கே தலைவர் பெரியார் தெரிகிறார்!


இவ்வாறு 'விடுதலை' அலுவலகத்தினருக்குக் கொடுக்கும் சம்பளம் போதாது என்பதை எவ்வளவு நாசுக்காகவும், குத்தலாகவும் கூறுகிறார் குருசாமி! பெரியார் இதையெல்லாம் 'சீரியசாக' எடுத்துக் கொள்ள மாட்டார். குத்தூசியாரின் மேல் அவருக்கு இருந்த அளவுகடந்த அன்பே அதற்குக் காரணம்.

# விடுதலை ஆசிரியரும் எருமை மாடும்



படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் நாட்டைப் பாலைவனம் ஆக்க சதி

**தமிழ்நாட்டைப் பாலைவனமாக்கச் சதி வேலை நடக்கிறது!**

**தடுத்து நிறுத்தத் தமிழக அரசுக்குத் தமிழ்ச்சான்றோர் பேரவை கோரிக்கை**

தமிழ்நாட்டை மொட்டையடித்து, வற்றல் பாலைவனமாக மாற்றி விடுவதென்று கங்கணங் கட்டிக் கொண்டு, நமது அண்டை மாநிலங்கள் வேலை செய்வதாகத் தெரிகிறது. அதற்குப் பெரும் பாலும் கன்னட, மலையாள, ஆந்திர அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் நமது தமிழ்நாட்டுக் காட்டிலாகாவும் முழு ஒத்துழைப்புக் கொடுத்து வருவதாகவே தெரிகிறது.

அண்மையில் தான் கருநாடகத்திற்கும், கேரளத்திற்கும் அருகிலுள்ள நீலகிரி, கோவை மாவட்டங்களைச் சேர்ந்த பன்னூறு ஏக்கர் பரப்பளவுள்ள தமிழ்நாட்டுக் காடுகள் திடீர் திடீரெனத் தீப்பற்றி எரிந்து சாம்பலானது. அதன் காரணமாக அக்காடுகளில் வாழ்ந்த வனவிலங்குகள் கேரள, கருநாடகக் காடுகளுக்குச் சென்று விட்டன.

இதில் வியப்புக்குரிய செய்தி என்னவென்றால், தமிழகக் காட்டின் தொடர்ச்சியாகவே உள்ள கருநாடக, கேரள காடுகளில் ஒரு அங்குலம் கூட அத் தீ பரவவில்லை என்பதாகும்.

இதைத் தொடர்ந்து இப்பொழுது நீலகிரி மாவட்டத்தில் 150 ஆண்டுகள் பழமைவாய்ந்த மரங்கள் வெட்டப்பட்டு, கேரளாவுக்குக் கடத்தப்படுவதாகப் பத்திரிகைகளில் படங்களுடன் செய்தி வெளியாகியுள்ளது.

ஏற்கனவே நீலகிரி மாவட்டத்தில் மரங்கள் வெட்டப்பட்டதால் நிலச் சரிவு ஏற்பட்டு, பல பகுதிகள் பாழடைந்து விட்டன. இன்றைக்குத் தமிழ்நாட்டில் பல பகுதிகளிலும் மொட்டை மலைகளாக இருப்பவையெல்லாமே ஒரு காலத்தில் வளம் செறிந்த காட்டோடு அருவிகள் சொரிவதாகவே இருந்துள்ளதைச் சங்க இலக்கியங்கள், தேவாரப் பதிகங்கள் மற்றும் தனிப்பாடல்கள்



படிப்பகம்

www.padippakam.com

மூலம் அறிகிறோம். அங்கிருந்த மரங்கள் வெட்டப்பட்டு, காடு அழிக்கப்பட்டதாலேயே, மண் சரிந்து, இன்று அவை மொட்டை மலைகளாகக் காட்சியளிக்கின்றன. எஞ்சியிருக்கும் தமிழ்நாட்டுக் காட்டு வளத்திற்கு இன்றியமையாத பொதிகை, கொடைக்கானல், நீலகிரி, ஏற்காடு போன்ற மலைகளையும் அதுபோன்று அழித்துவிடத் திட்டமிட்ட சதி நடப்பதாகவே தெரிகிறது.

இத்தனைக்கும் மொழிவாரியாக மாநிலங்கள் திருத்தியமைக்கப்பட்ட போது நம்முடைய காட்டு வளம் அண்டை மாநிலங்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது போக அவர்கள் போனால் போகிறது என்று விட்டவைதான் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்டது.

ஏனென்றால், இந்திய அரசியல் சட்டப்படி ஒரு மாநிலத்தில் மூன்றில் ஒரு பங்கு அதாவது 33 விழுக்காடு காடு இருக்க வேண்டும். ஆனால், நமது தமிழ்நாட்டில் இருப்பதோ 17 விழுக்காடு காடு மட்டுமே. அதாவது பாதிக்குப்பாதி, இருந்தும் இதையும் பங்கு போட்டுக்கொள்ள அல்லது பாழ்படுத்திவிட நமது அண்டை மாநிலங்கள் சதி செய்வதும், அதற்குத் தமிழக வனத்துறையே துணை போவதும், அதை நடுவணரசு கண்டு கொள்ளாமல் இருப்பதும், தமிழர்களை அவர்கள் இந்தியர்கள் என்றே கணக்கிடவில்லையோ என்ற எண்ணத்தையே ஏற்படுத்துகிறது. தமிழ்நாடும் இந்தியாவைச் சேர்ந்தது தான் என்று அவர்கள் கருதியிருந்தால் இப்படிச் செய்ய மாட்டார்களே!

இங்கே இன்னொன்றையும் நினைவில் கொள்ள வேண்டும். அண்மையில் நடந்த இந்திய வன ஆய்வு அறிக்கையின்படி நமது அண்டையிலுள்ள ஆந்திராவும், ராஜஸ்தானும், இமாசலப்பிரதேசமும் 3 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடு வரை தங்கள் காட்டின் பரப்பளவைப் பெருக்கியுள்ளன.

இத்தனைக்கும் எம்.ஜி.ஆர் முதலமைச்சராக இருந்தபோது உலகவங்கியின் கடனுதவியோடு தமிழ்நாட்டில் காட்டுவளத்தைப் பெருக்கும் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. சாலையோரக் காடுகள், ஆறு, ஏரி, ஓடைக் கரைகளில் அபிவிருத்தி என்றெல்லாம் அத்திட்டத்தில் கூறப்பட்டிருந்தது.

ஆனால், நமது வனத்துறையோ அப்படிப் புதுக்காடுகளை உருவாக்குவதற்கு மாறாக இருந்த பழைய காடுகளையும் அண்டை மாநிலங்கள் அபகரித்துக் கொள்ளவே துணை போனது. இப்போதும் துணை போய்க் கொண்டிருக்கிறது.



அதிலும் கேரளா மாநிலம், மலைக்காடுகள் நிறைந்த மாநிலமாக இருந்தும் அங்குள்ள மக்களின் அன்றாடத் தேவைக்குக் கூட மர அறுப்பு ஆலைகளுக்குத் தமிழ்நாட்டிலிருந்தே மரங்கள் வெட்டப்பட்டு எடுத்துச் செல்லப்படுகின்றன. அங்கே எங்கு பார்த்தாலும் ஆறுகள் இருந்தாலும் அங்குக் கட்டப்படும் கட்டடங்களுக்குத் தமிழ்நாட்டு ஆறுகளிலிருந்துதான் மணல் அள்ளிக் கொண்டு போகப்படுகின்றது. அதுவே மலைநாடு. இருந்தாலும் அங்குள்ள சாலைகளுக்குத் தமிழ்நாட்டிலிருந்தே சரளைக்கல் கொண்டு போகப்படுகிறது. ஆனால், கடலில் வீணாகப் போனாலும் போகட்டும் தமிழ்நாட்டுக்கு மட்டும் தண்ணீர் தர மாட்டோம் என்கிறார்கள். இதே கொள்கையைத் தான் ஏனைய அண்டை மாநிலங்களும் பின்பற்றுகின்றன. இப்படியே போனால் தமிழ்நாடு மிக விரைவில் பாலை வனமாக மாறிவிடக் கூடும். இதை உடனடியாகத் தடுத்து நிறுத்தியாக வேண்டும்.

அதற்கு தமிழ்நாட்டு அதிகார வர்க்க நடைமுறைகளை மாற்றியமைப்பது இன்றியமையாததாகும். ஏனென்றால், பழைய சென்னை மாகாண அதிகார வர்க்கமும், நடைமுறைகளும் நம் தமிழ்நாட்டில் இன்றும் தொடர்கிறது. ஆனால் ஆந்திராவிலும், கருநாடகாவிலும், கேரளாவிலும் அவை மொழி வழியாகத் தனி மாநிலங்களாக அமைந்த போதே அதிகார வர்க்கத்தையும், நடைமுறைகளையும் முற்றிலும் புதிதாக உருவாக்கிக் கொண்டு விட்டன. சென்னை மாகாணத் தொடர்ச்சி நிலையை மாற்றியமைத்து விட்டன.

அப்படியிருக்க, நம் தமிழ்நாட்டில் மட்டும் ஏன் பழைய சென்னை மாகாண நடைமுறைகள் தொடர வேண்டும்? அதன் மூலம் தமிழ்நாட்டுத் தனி நலன்களை ஏன் பாழ்பட வேண்டும்?

கூடாது. தமிழ்நாட்டின் தன் அதிகார வர்க்கத்தை உடனடியாகத் திருத்தியமைக்க வேண்டும் என்பதுடன், தமிழ்நாட்டின் இயற்கை வளங்களை அண்டை மாநிலத்தார் சுரண்டுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்கிறது தமிழ்ச்சான்றோர் பேரவை.



படிப்பகம்

www.padippakam.com





# திருஞான சம்பந்தர்

திருவாரூர் கே.தங்கராசு

## காட்சி 29

இடம்: திருப்பூந்துருத்தியில் ஊருக்கு வெளியேயுள்ள ஒரு பாழடைந்த இடம்.

நேரம்: அதிகாலை.

(காலைத் துயிலெழுந்து நீராடி, நீறணிந்த நாவுக்கரசர், அம் மடத்தும் புறத்தும் முளைத்திருந்த செடி கொடி, புல் பூண்டுகளைத் தமது உழவாரங் கொண்டு துப் புரவு செய்தபடியே பாடிக் கொண் டிருக்கிறார்.)

நாவுக்: ◆ ஆட்டுவித்தால்
ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர்
அடங்காதாரே!
ஓட்டுவித்தால் ஆரொருவர்
ஓடாதாரே
உருகுவித்தால் ஆரொருவர்
உருகாதாரே
பாட்டுவித்தால் ஆரொருவர்
பாடாதாரே
பணிவித்தால் ஆரொருவர்
பணியாதாரே
காட்டுவித்தால் ஆரொருவர்
காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய்க்
காட்டாக்காலே!

(மேலும் பாட ஆரம்பிக்கிறார்.)

அப்பன்நீ அம்மைநீ அய்யனும்நீ!
அன்புடைய மாமனும் மாமியும்நீ!

(திடீரென்று பெரும் ஆரவாரத் தோடு சங்கு, தாரை, தப்பட்டை ஒலிகளையும் மீறிக் கொண்டு, "பாலாறவாயர் வந்தார்" "பரசமயக் கோளரி வந்தார்" "ஆளுடையப் பிள்ளை வந்தார்". "அமணரை அழித்த அய்யன் வந்தார்" என்பன போன்ற கூப்பாடுகளும், வாழ்த் தொலிகளும் விண்ணதிர முழங்க ஏக ஆடம்பரத்துடன் தமது பரி வாரங்கள் புடை சூழ சம்பந்தன் பல்லக்கிலே வருகிறான். பார்த்த நாவுக்கரசர், தமது பணியை அப் படியே நிறுத்திவிட்டு முன்னோடி வந்து சம்பந்தன் காதில் விழு மாறு:)

நாவுக்கரசர்: நமோ நம! நமோ நம! ஆளுடையப் பிள்ளையே வருக! அருள் ஞான வள்ளலே வருக! அடியேன் நாவுக்கரசன் வணக்கம்! (என்று கூறிய படியே வணங்குகிறார்)

(கூட்டமோ, சம்பந்தனோ இவரைச் சிறிதும் பொருட் படுத்தாது கூப்பாடு போட்ட படி தன் வழியே போய்க்கொண்டே யிருக்கிறது. நாவுக்கரசர் விடாது தொடர்ந்து சென்று)

நாவுக்: ஸ்வாமிகளே! அடி யேன் நாவுக்கரசன் வணக்கம்! ஸ்வாமிகளே! என்னைத் தெரிய வில்லையா.... நான் நாவுக்கரசன்.... தற்போது இப்பூந்துருத்தியில்தான் வாசம் செய்கின்றேன்...!

(என்று கூறியபடியே தொடர்ந் தவர், எவருமே தன்னைச் சிறிதும் மதியாது போகவே - மன மொடுங்கிச் சோர்ந்து சம்பந்தனது பல்லக்கின் பக்கத்தில் சேர்ந்து நடக்கின்றார். சற்றுப் பொறுத்து அவரது பார்வை பல்லக்கைச் சுமந்து செல்லும் ஒருவன்மீது பாய்கிறது. அந்தோ! என்ன கொடுமை! 'அன்புமதத்'தைப் பரப் பும்(?) அறத்தலைவரைச் சுமக்கும் அவன் தோள்கள் கன்றிப் போய் இரத்தங்கட்டிப் புண்ணாகி இருக்

---

◆ திருநாவுக்கரசர் தேவாரம்; பொது, பக்கம் – 526.



படிப்பகம்

www.padippakam.com

கின்றது. சித்திரவதை தாளாது தவிக்கும் அவன் உள்ளத்தை விழிகள் படம் பிடித்துக் காட்டுகின்றன; வாயும் முணு முணுக்கின்றது. இயல்பாகவே கொடுமை கண்டு இரங்கும் இதயங்கொண்ட நாவுக்கரசர் உள்ளம் இந்தக் கோரங் கண்டு துடிக்கின்றது. உடனே வலுவில் சென்று அவனிடம்)

நாவுக்கரசர்: அப்பனே! சற்று விலகு! அடியேன் சுமக்கின்றேன்!

பல்லக்கு சுமப்பவன்! (திடுக்கிட்டு) வேண்டாமுங்க, நீங்க யாரோ சாமியார்....!

நாவு: பாதகமில்லை அப்பனே! "பரமன் முன்பு நீயும் நானும் ஒன்றே! பணியும் அது போன்றதே!" எல்லோரும் எப்பணியும் புரியலாம். சற்று விலகு...!

பல்ல: சும: சாமி!

நாவு: தயங்காதே உம் நகரு...

(என்று கூறி அவனை அப்பால் விலக்கி விட்டு தமது தோளிலே, கொலைகாரப் பார்ப்பனனாம் சம்பந்தன் ஏறி இருந்த பல்லக்கைச் சுமந்து செல்கிறார்)

(பக்தர் குழாம் ஊரினுள் புகுந்து வீதிகளைக் கடந்து கோயில் முன்னர் வந்து சந்நிதியில் புகுந்து திருமடத்தைக் கடந்து செல்லும்போது, நாவுக்கரசரை நினைத்துக் கொண்ட சம்பந்தன், தனது அருகில் நின்றவர்களைப் பார்த்து)

சம்பந்தன்: எங்கே அப்பரைக் காணோம்! மடத்தில் இல்லையோ... தற்போது எங்கே இருக்கின்றார்?

(பல்லக்கைச் சுமந்தபடியே நின்ற அப்பர் இதைக் கேட்டு)

• நாவுக்: அடியேன் நாவுக்கரசன் இங்கே அடியில் உள்ளேன்!

---

• வந்தணைந்த வாகீசர் வண்புகலி
வாழ்வேந்தர் சந்தமணித் திருமுத்தின்
சிவிகையினைத் தாங்கியே
சிந்தைகளிப் புறவந்தார்
திருஞானசம்பந்தர்
புந்தியினில் வேறொன்று
நிகழ்ந்திடமுன் புகலகின்றார்.

பெரிய புராணம், சம்பந்தர் வரலாறு 934 – ஆம் பாடல்.

சம்ப: (திடுக்கிட்டு) யார் அப்பரா!

நாவுக்: ஆம் ஸ்வாமிகளே!

சம்ப: எங்கே இருக்கின்றீர்; வாரும் இப்படி-!

நாவுக்: தற்போது வருவதற்கில்லை. தங்கள் பல்லக்கைச் சுமந்து கொண்டு இருக்கின்றேன்...!

சம்ப: (ஆச்சரியத்துடன்) என்ன! என் பல்லக்கையா... நீரா சுமக்கின்றீர்....? இதென்ன விசித்திரம்...! (என்று கூறியபடியே கீழே இறங்கி வந்து பார்த்து)... என்ன அப்பரே எப்போதிருந்து இப்பணி?

நாவுக்: சற்று முன்னர்தான் ஏற்றேன்; ஊருக்கு வெளிப்புறம் உழவாரத் தொண்டு புரிந்து கொண்டிருக்கும் போது ஸ்வாமிகள் வருகை கண்டு ஓடோடி வந்தேன்; வரும்போது.... என்னாலான இச்சிறு தொண்டும்....

(இதற்குள் பல்லக்கை மற்றவர்களும் இறக்கவே... அப்பரும் அவர்களோடு சேர்ந்து இறக்கி வைத்து விட்டு சம்பந்தனோடு சேர்ந்து பேசியபடியே ஆலயத்தினுள் போகிறார்.)

சம்ப: தவறு அப்பரே... நீர் சுமந்தது தவறு! அவரவர் கடமையை அவரவர் செய்ய வேண்டும்; உமது இடத்திலே ஒருவன் சுமந்து வந்தானே... அவன் எங்கே?

நாவுக்: பாவம், அவன் தோள்கள் புண்ணாகிவிட்டன!

சம்ப: (கிண்டலாக) அதைப் பார்த்த உமது மனம் புண்ணாகி விட்டதாக்கும்!

நாவுக்: இயற்கைதானே! அவனது இதயத்தில் இருக்கும் ஆண்டவன்தானே என் உள்ளத்திலும் உறைபவன் உரு எதுவாக இருந்தாலும், கரு ஒன்றுதானே!

சம்ப: (சற்று ஆத்திரத்தோடு) என்ன வாகீசரே! இந்த ஆராய்ச்சியெல்லாம் உமது பழைய சமணத்தின் வாடையா?- இல்லை பவுத்தத்தின் பகுத்தறிவு மணமா? இல்லை உமது குறும்புத்தனத்தின் எல்லையா?

நாவு: (மிகவும் அடக்கமாக) மன்னிக்க வேண்டும், ஸ்வாமிகள் மனம் புண்பட்டு இருந்தால்! நான் குறிப்பிடுவது நமது அன்புச் சைவத்தின் தத்துவமேதான்!

சம்ப: (ஆங்காரமாக) எதுங் காணும் சைவம்! மகாசைவம்! உமது சைவத்தைக் கொண்டு போய் உடைப்பிலே போடும். உமது அழகிய சைவ சித்தாந்தப் படி ஆடு, மாடு, கோழி, குருவி, பேன், புழு, பூச்சி, ஆகிய அத்தனை ஜீவராசிக்குள்ளும் ஆண்டவன் புகுந்து கொண்டிருக்கிறான்! (அதட்டி) ஏன் அப்படித் தானே...?

நாவுக்: (மிகவும் சாந்தமாக) ஆம்!

சம்ப: அப்படியானால் நமது வேள்வியும், பலியும் என்னாவது? நமது வேதமதம் என்னாவது? நீர் சொல்வது சுத்த சமணம்; உமது பழைய பைத்தியக்காரக் கொள்கையில் இருந்து நீர் இன்னமும் விடுபடவில்லை!

நாவுக்: ஜீவ ஹிம்சை கூடாது என்பதற்கு நமது மதத்தில் இடமில்லை என்றா சொல்கிறீர்கள்?

சம்ப: விளக்கம் சொல்ல நான் தயாராக இல்லை; நீர் நமது மறைகளைச் சரியாக, முறையாகப் படிக்கவில்லை...! அவ்வளவுதான்!

நாவுக்: படித்தேன் ஸ்வாமிகளே, பலமுறை படித்தேன்! "ஜீவனே கடவுள் - கடவுளே ஜீவன்" என்று வரையறுத்துக் கூறும் "தத்துவமஸி" என்ற வேத வாசகம் மட்டுமல்ல "அயமாத்மா பிரமம்" எனும் ஆத்மாவே கடவுள் என்னும் வாசகமும் என் இதயத்திலே நிறைந்திருக்கிறது ஸ்வாமிகளே! நிறைந்திருக்கிறது!

சம்ப: வேத வாசகங்களையே கூறி என்னை மடக்கப் பார்க்கின்றீர்? நாவரசு இல்லையா!

நாவுக்: அய்யோ! உமைப்பால் உண்டு உலக ஞானம் பெற்றிலங்கும் தங்களை - அஞ்ஞான மாய்கைக்குள் அவதிப்பட்டுக் கிடக்கும் இந்தக் கட்டை அப்படியெல்லாம் நினைக்குமா?

சம்ப: அப்பரே, என்னை



படிப்பகம்

www.padippakam.com

எதிர்த்து இத்தனை பேசியும், நீர் இன்னமும் இருக்கின்றீர்?

நாவு: எதிர்த்தா? தங்களையா?

சம்ப: வேறு? வேத மதத்தின் உயிர்க்கொள்கையாம் வேள்வியை நீர் அடிக்கடி எதிர்க்கிறீர்- பிழைக்கிறீர் - எத்தனை பாசுரம் பாடி இருக்கிறீர்? இது வரை எத்தனை ஆலயம் சுற்றி இருக்கிறீர்! எங்காவது ஓரிடத்தில் வேள்வியை ஆதரித்து - பலியை ஆதரித்து ஒரு பாடல், ஒருவரி பாடி இருக்கிறீரா? தொலையட்டும், எதிர்க்காமல் இருந்திருக்கிறீரா? போகிற இடம் எல்லாம் "அன்புச் சைவம்" என்ற போர்வையில் "அஹிம்சா பரமோ தர்ம"ப் பிரசாரம் செய்து வருகிறீர்! "நீறும் - காஷாயமும்" தந்திருக்கிற பாதுகாப்பிலே நீர் சமணப் பிரசாரம் செய்கின்றீர்! நீர் ஒரு சைவத் துரோகி! விரோதி!

நாவு: சிவ... சிவ...!

சம்ப: வாயை மூடும்! சிவனுக்காகப் பிளக்கின்ற உமது வாயை, நமது மதங்காட்டும் சில்லறைத் தெய்வங்களுக்காக ஏன் திறப்பதில்லை? தேவர்களுக்காக வேள்விகளில் தரப்படும் 'ஆகுதி'யை ஏன் நீர் ஆதரிப்பதில்லை? சொல்லும்?



நாவு: ஞானசம்பந்தப் பெருந்தகையே! என்னை எனது பொறுமையின் எல்லைக்குத் துரத்தி விட்டீர்கள்? இப்பூந்துருத்தி உறை புஷ்பவனநாதர், அழகாலமர்ந்த நாயகி ஆணையாகக் கூறுகின்றேன்.

(என்றபடி பரபரப்புடன் கரங்களைத் தூக்கி மூலஸ்தானத்தைப் பார்த்தபடி பாட ஆரம்பிக்கின்றார்.)



நாவு: என்றும் நாம் யாவர்க்கும்
இடைவோமல்லோம்
இருநிலத்தில்
எமக்கெதிராவார்
யாருமில்லை
சென்று நாம் சிறு
தெய்வம்
சேர்வோமல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப்
பெற்றோம்
ஒன்றினாற் குறையுடையோ
மல்லோமன்றே
உறுபிணியார்
செறலொழிந்திட்டோடிப்
போனார்
பொன்றினார் தலைமாலை
அணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணிய
புண்ணியத்துளோமே!



---

•திருநாவுக்கரசர் தேவாரம், பொது. பதிகம் 533.

(பாடி முடித்து சம்பந்தனைப் பார்த்து)

நாவு: ஆளுடைப் பிள்ளையாரே! நாம் வருகிறோம்....! எந்த நிலையிலும் நாம் பலியையோ - பல தெய்வ வழியையோ ஆதரிக்க மாட்டோம்! மாறாக செல்லுமிடமெல்லாம் செல்வோம்! எம் சிந்தையுரை தில்லைக் கூத்தன் பெயர் கூறி, அன்பும் அறனும் பெருகப் பாடுவோம், நாமார்க்கு குடியல்லோம்! நமனை அஞ்சோம்!

(என்று ஆவேசமாகக் கூறிவிட்டு மறுமொழியை எதிர்பாராது விடுவிடென்று வெளியேறிப் போகின்றார்...)

சம்ப: (மெதுவாகத் தலையாட்டி) நமனையஞ்சோமோ? உம்! பார்ப்போம்! (பெருமூச்சு விடுகிறான்.)

**காட்சி 30**

இடம்: திருமயிலை மாடவீதியில் பெருவணிகர் சிவநேசன் இல்லம்.

நேரம்: மாலை.

(சிவநேசனின் ஒரே மகளாம் பூம்பாவை, தாய், தந்தை மற்றும் உற்றார் உறவினர் முன்பாக சம்பந்தனால் பாடப்பட்ட "பக்திப்



படிப்பகம்

www.padippakam.com

பாடல்''களைப் பாடி ஆடிக் காட்டிக் கொண்டிருக்கிறாள்.)

பூம்பாவை: (பாடுகிறாள்)

1. • "பந்து சேர் விரலாள்
பவளத்துவர் வாயினாள்
பனிமாமதி போல் முகத்து
அந்தமில் புகழாள்
மலைமாதொடும் ஆதிப்பிரான்
வந்து சேர்விடம் வானவ
ரெத்திசையும்
நிறைந்து வலஞ் செய்து மாமலர்
புந்தி செய்து இறைஞ்சிப்
பொழிப் பூந்தராய்ப்
போற்றுதுமே"
(பாடியபடியே
ஆடுகிறாள்)

2. " காவியங்கருங்
கண்ணினாள் - கனித்
தொண்டை வாய்க் கதிர்
முத்தம்
நல் வெண்ணகைத்
தூவியம் பெடை
அன்ன நடைச் சுரி
மென் குழலாள்

3. பையராவரும்
அல்குல் மெல்லியல்
பஞ்சின் நேரடி வஞ்சி
கோள்
நுண்ணிடைத்
தையலாள்!

4. முள்ளி நாண் முகை
மொட்டியில் கோங்கின்
அரும்பு தேன் கொள்
குரும்மை மூவாமருந்து
உள்ளியன்ற பைம்
பொற்
கலசத்திலொத்த முலை!

5. பண்ணியன்றெழு
மென்மொழியாள் -
பகர்
கோதையோ திகழ் பைந்தளிர்
மேனியாள்

6. வான் நிலாமதிபோல்
நுதலாள் - மட
மாழை யொண் கணாள்
வண் தரளந் நகை
பண் நிலாவிய இன்னிசையார்
மொழிப் பாவை!

7. காருலாவிய வார் குழலாள் - கயற்
கண்ணினாள் புயற்
கால் ஒளி மின்னிடை
வாருலாவிய மென் முலையாள்!
மென்முலையாள்!"

(காமச்சுவை மிக்க இப் பாடலை அங்கக் குறிப்புகளுடன் வாலைக் குமரியாகிய "பூம்பாவை" பக்திப்பாட்டு யென்ற பெயரால் பாடி ஆடி வருவதைக் காணச் சகியாத பெரியவர் ஒருவர் இடைமறித்து....)



பெரியவர்: போதும்மா.... போதும்! பாட்டு ரொம்ப அழகா இருக்கு! நிறுத்திடு போதும்!

(என்றதும் பூம்பாவை நிறுத்தி விடுகிறாள். உடனே பெரியவர் சிவநேசனைப் பார்த்து)

பெரியவர்: ஏன்'யா சிவநேசா... உம்பொண்ணு பூம்பாவை இந் நேரம் பாடினது எல்லாம் ஞான சம்பந்தர் பாடின தேவாரந்தானே!

சிவநேசன்: ஏன்.... சந்தேகமா கேட்கிறீங்க...?

பெரிய: இல்லே, பக்தியை ஒருவரியிலே கூடக் காணோமே ஒரு சமயம்.... வேற யாராவது...

சிவ: சேச்சே! எம்பொண்ணு வேறே ஆள் பாடினதைக் கண்ணாலேகூடப் பார்க்க மாட்டாள்.... இது பூராவும் சம்பந்தப் பெருமான் தேவராமேதான்... ஒவ்வொரு பாட்டிலே கடைசியிலே ஒருவரி கடவுள்மேலே இருக்கு.... அதை நம்ப குழந்தை நாட்டியத்துக்கு ஒத்து வரலேன்னு விட்டுடுச்சு, அவ்வளவுதான்!

பெரிய: அது சரி! இவ்வளவு வர்ணனையும், பண்ணிட்டு விளக்கமா, அப்புறமா ஒரு வரியிலே பக்தியைச் சொன்னால் கேட்கிறவன் புத்தி - பக்தியிலேயா போவும். தொலையட்டும்... (பூம்பாவையைப் பார்த்து) ஏம்மா... பாவை! வேறே நல்ல பாடலா பார்த்து பாடம் பண்ணும்மா - இதெல்லாம் வேண்டாம்!

சிவ: அய்யய்யோ... நீங்க குழந்தைக்கிட்டே அப்படியெல்லாம் சொல்லாதீங்க; அதுக்கு சம்பந்தர் மேலே ரொம்ப மதிப்பு! அவர் பாடல்கள் மேலே உயிர்!

பெரி: அப்படியா! ரொம்ப சரி! நாங்க வர்றோம்... குழந்தைக்குக் காலகாலத்திலே ஒரு கல்யாணத்தை முடிச்சு வச்சுட்டா ரொம்ப நல்லா இருக்கும்! அப்புறம் எதைப் பாடினாலும் கவலை இல்லை... வரட்டுமா'ம்மா!

பூம்பாவை: (தலையை ஆட்டுகிறாள்!)

(வந்தவர்கள் எல்லோரும் புறப்பட்டுப் போகிறார்கள்.) ●

---

• சம்பந்தர் தேவாரம், பக்கம் 72.



படிப்பகம்

www.padippakam.com

**எழுகதிர் அருகோ**

# மதப் பூசலுக்கு மகுடம்

இன்று குஜராத் பற்றி எரிவதற்கும், இந்தியத் துணைக்கண்டமெங்கும் மதப்பூசல் தலைவிரித்து ஆடுவதற்கும் பாபர் மசூதி இடிக்கப்பட்டதும், அந்த இடத்தில் இர்ாமர் கோயில் கட்டும் பிரச்னையும் மட்டும் காரணமல்ல. சுதந்திர இந்தியாவில் மாநிலங்களுக்குப் பரிபூரண சுயாட்சி வழங்கப்படாததே உண்மையான காரணமாகும்.

1935 ஆம் ஆண்டு உருவான அம்மா நில சுயாட்சித்திட்டத்தைப் பேராய (காங்கிரஸ்)க் கட்சி ஏற்றுக்கொண்டு செயல்படுத்த முன்வந்திருக்குமாயின், இந்தியாவை இந்துக்கள், முஸ்லீம்கள் என்று மத ரீதியில் பிரித்த பாகிஸ்தான் பிரிவினையும் நடந்திருக்காது. அதன் எதிரொலியாக 'காஷ்மீர் பிரச்னை' தோன்றி, துணைக் கண்டத்திற்கே தீராத தலைவலி கொடுப்பதாக மாறியுமிருக்காது.



ஏனென்றால், பாகிஸ்தான் பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்த காயிதே ஆஜம் ஜின்னா அவர்களும், முஸ்லீம் லீக்கும் மாநில சுயாட்சிக் கொள்கையை, காங்கிரஸ் கட்சியினரும், இந்துமதவாத அமைப்புகளும் உண்மையாகவும், உறுதியுடனும் நடைமுறைப்படுத்த முன்வந்தால், தாங்கள் பாகிஸ்தான் கோரிக்கையைக் கைவிடவும் தயாராக இருப்பதாக ஆங்கில ஆட்சியினர் முன்னிலையில் பகிரங்கமாக முன் வந்தனர்.

ஆனால், 1937 ஆம் ஆண்டு மத்தியிலும், மாநிலங்களிலும் இடைக்கால ஆட்சியில் பங்கு பெற்ற காங்கிரஸ் கட்சியினர் அதன் பார்ப்பனத் தலைமையின் ஆலோசனையின்படி, ஆங்கிலேய அரசு, காங்கிரஸ் கட்சி, முஸ்லீம் லீக் ஆகிய முத்தரப்பும்கூடி உருவாக்கிய 1935-ஆம் ஆண்டின் மாநில சுயாட்சிக் கொள்கையைத் தூக்கியெறிந்து விட்டு, முஸ்லீம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மேற்கு பஞ்சாப், கிழக்கு வங்கம், சிந்து மற்றும் எல்லைப்புற மாநிலங்களிலும் இந்துத்துவக்கொள்கைகளை மறைமுகமாக நடைமுறைப்படுத்த முனைந்ததன் விளைவாகவே, முஸ்லீம்லீக் "பிரிட்டீசார் இந்தியாவுக்கு விடுதலை கொடுப்பதாயின் முதலில் பாகிஸ்தானைப் பிரித்துக் கொடுத்து விட்டுத் தான் அதைச் செய்ய வேண்டும்" என்ற கடுமையான நிலையை மேற்கொண்டது. அப்படியே நடக்கவும் செய்தது.

●●

'இந்து'ராம், 'துக்ளக்' சோ போன்ற பார்ப்பனிய மேலாதிக்க விரும்பிகள் "இந்தியாவுக்கு காங்கிரஸ் - பி.ஜே.பி. ஆகிய இருகட்சி ஆட்சிமுறையே போதும்" என்று எழுதவும் பேசவும் தலைப்பட்டிருக்கிறார்கள்.

●●

மாநில சுயாட்சித் திட்டத்தை மறுத்து, முஸ்லீம் லீக்கை பாகிஸ்தானைப் பிரித்தெடுக்க உந்தியது மட்டுமல்ல, அந்த எண்ணத்தை முதன் முதலில் உருவாக்கியவர்களே இந்து மகாசபை, ஆரிய சமாஜம் மற்றும் காங்கிரசில் இருந்த பார்ப்பனியத் தலைவர்களேயாவர்.

முஸ்லீம்களைத் துரத்திவிட்டு, பிரிட்டீசாரிடமிருந்து விடுபடும் இந்தியாவை இந்துதர்மநாடாகப் பிரகடனப் படுத்த வேண்டும் என்று அவர்கள் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த போது முஸ்லீம் லீக் தோன்றவில்லை என்பதும், ஜின்னா அப்போது காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளராக இருந்தார் என்பதும் மறக்க வேண்டாத செய்தியாகும். மறைக்கப்பட்ட செய்தியுமாகும்.

பாகிஸ்தான் பிரிவினைக்கே வழிவிட்டு, மாநில சுயாட்சிக் கொள்கையை ஏன் மறுத்தார்கள் என்றால், இராணுவம், தகவல் தொடர்பு, நாணயம், அயலுறவு ஆகிய நான்கைத் தவிர, ஏனைய முற்றதிகாரமும் மாநில அரசுகளுக்கே இருக்க 1935ஆம் ஆண்டுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்தது. அத்திட்டம் நடைமுறைக்கு வந்திருந்தால் இந்தியாவில் பார்ப்பன ஆதிக்கம் நிறைபெற முடிந்திருக்காது.

ஏனென்றால், ஒட்டுமொத்த இந்தியா என்று வருகிறபோது 80



படிப்பகம்

www.padippakam.com

விழுக்காடு அதிகாரங்களை, வசதி வாய்ப்புகளைத் தங்களிடம் வைத்துக் கொண்டிருக்கும் பார்ப்பனர்கள், மாநில வாரியாகப் பார்த்தால் 0-இல் தொடங்கி, 5 சதவீதமே உள்ளனர். சராசரியாகப் பார்த்தால் 2 முதல் 3 சதவீதமே இருக்கின்றனர்.

அத்துடன் இந்து மதம் என்பது கிறிஸ்துவம் போலவோ, இஸ்லாம் போலவோ ஒரே வேதம், ஒரே மார்க்கம் என்பதாகவுமில்லை. அதன் தன்மை ஒவ் வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு விதமானது. உதாரணமாக நம் தமிழ் நாட்டையே எடுத்துக் கொள்வோம். இங்கே சைவமென்றால் தேவார திருவாசகங்களும், வைணவமென்றால் திவ்வியப்பிரபந்தமுமே முதன்மையானவை.

வடமொழி வேத - புராண - இதிகாசக் கோட்பாடுகள் மேலோங்கியிருப்பது பார்ப்பனத் தலைமையினாலேதான். பார்ப்பனத் தலைமை மேலோங்கி நிற்பது ஏக இந்தியத்தன்மையினாலேதான்.

பரிபூரண மாநில சுயாட்சி நடைமுறைக்கு வருமானால் இந்தப் பார்ப்பன மேலாண்மை குறைந்து, இந்து மத அடிப்படையில் மொழிவழித் தேசிய இனங்களின் தனித்தன்மையை மறைத்து, ஆட்டிப் படைக்கும் தங்கள் ஆதிக்கம் செல்லுபடியாகாது என்பதாலேயே அவர்கள் அதை எதிர்த்து முறியடித்து விட்டனர்.

இன்னும் சொல்லப்போனால் பாகிஸ்தான் பிரிந்து அங்கு முஸ்லீம் மதவாதம் தாண்டவமாடுவது, ஏனைய இந்தியாவில் இந்துமத வாதத்தை எழுப்பி அதன்மூலம் பார்ப்பனியத் தனியாதிக்கத்தைப் பேணிவரத் துணை செய்யும் என்று எதிர்பார்த்தே பார்ப்பனிய சக்திகள் அப்படி நடந்து கொண்டன என்றும் சொல்லலாம்.

பாகிஸ்தான் பிரிவினையை ஜின்னாவையும் முந்திக் கொண்டு இராசகோபாலாச்சாரி (ராஜாஜி) ஆதரித்ததே அதற்காக உழைத்ததே இதை மெய்ப்பிக்கும்.

●●

**இந்து மதம் என்பது கிறிஸ்துவம் போலவோ, இஸ்லாம் போலவோ ஒரே வேதம், ஒரே மார்க்கம் என்பதாகவுமில்லை. அதன் தன்மை ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு விதமானது.**

●●



ஏனெனில், அதே இராச கோபாலாச்சாரி இங்கே சென்னை மாகாணத்தை மொழிவழியே பிரித்தமைக்க வேண்டும் என்று கிளர்ச்சி நடந்தபோது 'தட்சிணப் பிரதேச' திட்டத்தை முன்வைத்து அதைச் சீர்குலைக்க முயன்றார்.

ஆனால், ஆந்திரர்களின் விடாப்பிடிப்போராட்டத்தின் காரணமாக சென்னை மாகாணம் மட்டுமின்றி, இந்தியா முழுவதுமே மொழிவழி மாநிலங்கள் அமையும் நல்வாய்ப்புத்தோன்றியது. முதலில் எதிர்த்த நேரு பின்பணிய வேண்டியது ஏற்பட்டது.

பார்ப்பனியத்திடம் பக்தி கொண்டவராக இருந்தாலும் காந்தியார், பார்ப்பனராக இல்லாததன் காரணமாகவே இந்தியா மதரீதியில் பிரிக்கப்படுவதைக் கடைசிவரை எதிர்த்தார். காங்கிரஸ் கட்சியின் மாநிலக்குழுக்களை மொழிவழியே பிரித்தமைக்கவும் வழிவகுத்தார்.

விடுதலைக்குப் பின் காங்கிரஸ் கட்சியைக் கலைத்து விடவும் கட்டளையிட்டார். ஆனால், நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த கட்சி என்ற பெயரில் தொடர்ந்தும் இந்தியாவை ஆண்டுவர முடியும் என்பதாலேயே காங்கிரசிலிருந்த (பார்ப்பன) பட்டேலிஸ்டுகளும், நேருயிஸ்டுகளும் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அந்தப் பட்டேலிஸ்டுகளின் ஆதரவில் வளர்ந்த சங்கப்பரிவாரங்களின் அரசியல்முகமான பாரதீய ஜனதாதான் இன்று இந்தியாவை ஆளுகிறதென்பதும், அதற்கு மாற்றாகக் காங்கிரஸ் கட்சியே விளங்குகிறதென்பதும் வெள்ளிடைமலை.

அதனால் 'இந்து'ராம், 'துக்ளக்' சோ போன்ற பார்ப்பனிய மேலாதிக்க விரும்பிகள் "இந்தியாவுக்கு காங்கிரஸ் - பி.ஜே.பி. ஆகிய இருகட்சி ஆட்சிமுறையே போதும்" என்று எழுதவும் பேசவும் தலைப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

மூன்றாவது அணி என்று எத்தனை முளைத்தாலும் அவை இடைமுறிந்து போவதற்கும் இந்தப் பார்ப்பனிய எண்ணவோட்டமே காரணமாகும்.

உள்ளபடி இன்று காந்தியார் உயிரோடு இருந்திருந்தால் இந்தப் பார்ப்பனியத் திருவிளையாடல்களைப் பட்டறிவால் புரிந்துகொண்டு, "இந்தியத்துணைக் கண்டத்திலிருந்து மதப்பூசலை ஒழிக்க ஒரே வழி இதை மொழிவழி நாடுகளாகத் திருத்தியமைப்பதே" என்று சொல்லியிருப்பார்.

உண்மையும் அதுதான். ●



படிப்பகம்

www.padippakam.com

பாவலர் **பல்லவன்**



# பிடிமண்

● கோவணத்துடன் வெட்டியான்
மானங்காத்தது
சவத்துணி!

● வீரிய விதை
வான்தொடக் கேட்டது
பிடிமண்!

● மரம் வெட்டிக்கு எச்சரிக்கை
தண்டிக்க வருகிறது
புயல்!

● புயலுக்குப் பின்...
ஆகாயம் சூடியது
வானவில்!

● பசித்த நாய்
குப்பைத் தொட்டி கிளறியது
பிள்ளைக் கறி!

● சிறைப்பட்ட வாழ்வு
எதிர்காலம் சொல்லும்
சோதிடக் கிளிகள்!

● பசித்தவர் கோடி
மண்ணில் மிதிபடும்
திருஷ்டி பூசணிகள்!

● அரிசிக்கும் வரிவிதிப்பு
எரிமலை கொதிக்கிறது
ஏழை வீட்டு உலையில்!

● எத்தனை முறை சுடுவது
காந்தியை?
குஜராத்தில் கோட்சேக்கள்!

● இதுவல்லவோ மதம்!
நடத்தியது ரதயாத்திரை
நடக்கிறது பிணயாத்திரை!





படிப்பகம்

www.padippakam.com

# நந்தியை விலக்க தந்திகள்

மத்திய அரசின் பிராமணிய பிடியில் உள்ள சாகித்ய அகாதெமி, தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த அளவில் மேற்கொண்ட தகிடுதத்தங்களும் மேட்டுக்குடித்தனங்களும் சொன்னாலும் தீராது. சொல்லியும் மாளாது. இதன் அடாவடிப் போக்கு இலக்கியவாதிகளுக்கு உறைத்ததோ இல்லையோ உணர்ந்திருக்கிறார்கள்.

இதன் இலக்கிய அநீதிப் போக்கைச் சாடி, 'தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' உள்ளிட்ட அமைப்புகளும், பல்வேறு எழுத்தாளர்களும் வாதாடிப் போராடினார்கள். வெங்கடசாமிநாதன், அசோகமித்திரன் போன்றவர்களும் இவர்களது இலக்கிய எடுபிடிகளும் மட்டுமே மீண்டும் மீண்டும் சாகித்ய அகாதெமி நடத்தும் கருத்தரங்குகள் போன்றவற்றிக்கு ஆகாயப் பயணம் சாட்சியாக அழைக்கப்படுகிறார்கள்.


கந்தசாமி


பிரபஞ்சன்


அசோகமித்திரன்

பாரத விடுதலைப் பொன் விழாவில்கூட முதுபெரும் கவிஞனாக சுந்தர ராமசாமி அழைக்கப்பட்டார். சுரதா, கே.சி.எஸ். அருணாச்சலம் உள்ளிட்ட போராளிக் கவிஞர்களைப் பற்றி இந்த அகாதெமி கண்டுக்கவே இல்லை. இதை எதிர்த்தும், மானமுள்ள தமிழ்ப் படைப்பாளிகள் உரத்துக் குரல் கொடுத்தார்கள். இதனால், அசோகமித்திரனின் இலக்கிய அடிவருடியான ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்ட நூற்றாண்டுச் சிறுகதைகள் ரத்து செய்யப்பட்டன.

எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த அகாதெமியின் தமிழ் ஆலோசனைக் குழுவில், நாடறிந்த கவிஞரான ஈரோடு, தமிழன்பன், தமிழின் வீரியத்தை எட்டுத் திக்கும் எடுத்தியம்பும் பேராசிரியர் சுந்தரமூர்த்தி, மலரும் சருகும், தேநீர் போன்ற அற்புதமான படைப்புகளைத் தந்த மக்கள் எழுத்தாளர் டி. செல்வராஜ், பண்டைய தமிழ் இலக்கியத்தில் இலக்கிய நடுநிலைமையில் ஒரு இம்மிகூடப் பிசகாதவரும் தமிழ்ப் படைப்புகளை ஆங்கிலத்தில் கொண்டு செல்பவருமான பேராசிரியர் மணவாளன் போன்றோர்களை உள்ளடக்கிய ஆலோசனைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது இந்தக் குழு மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. இதற்கு ஏற்றாற்போல் சென்னையில் உள்ள சாகித்ய அகாதெமி அதிகாரிகளும், 'பத்துக்கு ஒன்பது பழுதில்லை' என்கிற வகையில் ஒத்துழைப்பு கொடுக்கிறார்கள்.

●●

**மேட்டுக்குடி எழுத்தாளர்கள் தங்களை அகாதெமிக்குள் புகுத்திக் கொள்ள சம்பந்தப்பட்ட துறைகளுக்கு நெருக்கடி கொடுத்து வருகிறார்கள்.**

●●

இந்தச் சான்றோர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு, அகாதெமியின் கண்ணுக்குத் தெரியாமல் இருந்த மாபெரும் தமிழ்ப் படைப்பாளிகளும், சிந்தனையாளர்களுமான அண்ணா, ஜீவா, பாரதிதாசன்,



படிப்பகம்

www.padippakam.com

சாமி சிதம்பரானார், ம.இராசமாணிக்கனார், இலக்குவனார், புலவர். குழந்தை போன்றவர்களின் இலக்கியத் தடங்களை நூல்களாகக் கொண்டுவர காரணமாக இருந்தது. பல்வேறு இலக்கியக் கருத்தரங்குகளுக்கு மண்வாசனை படைப்பாளிகளையும், சிந்தனைவாதிகளையும் அழைக்கிறது.

தேசிய அளவில், அசோகமித்திரன், வெங்கட சாமிநாதன் போன்றோர்கள் இன்னும் அகாதெமிக் கொடிக்குள்ளேயே கொடி கட்டிப் பறந்தாலும் இவர்களின் ஆதிக்கம் குறைந்து வருவதாகக் கருதப்படுகிறது. ஆனாலும், இந்த அகாதெமியின் ஆயுட்காலம் இன்னும் ஓராண்டுக்குக் குறைவாகவே உள்ளது.

மண்ணின் சுவாசிகளைக் கொண்ட இந்தக் குழுவின் இப்போதைய பதவிக்காலம் நெருங்க நெருங்க மேட்டுக்குடி எழுத்தாளர்கள் தங்களை

**திராவிட இலக்கியத்தைக் குறிப்பாக, அதன் மக்கள் இலக்கியத்தை முன்னெடுத்துச் செல்லும் முயற்சி முறியடிக்கப்படும். அகாதெமியின் நடவடிக்கைகளில் மண்வாசனைப் படைப்பாளிகள் தடம் தெரியாமல் போய்விடுவார்கள்.**







அகாதெமிக்குள் புகுத்திக் கொள்ள சம்பந்தப்பட்ட துறைகளுக்கு நெருக்கடி கொடுத்து வருகிறார்கள். இப்போதுள்ள குழு மாதிரி இன்னொன்று வந்தால் பிராமணியமும், அவற்றைத் தூக்கிப் பிடிக்கும் எழுத்துக்களும் அகாதெமியின் மூலம் வெளிப்படாமல் போய்விடும் என்று கலங்கிப்போன மேட்டுக்குடி எழுத்தாளர்கள் இப்போதே ஒரு புதிய இலக்கிய வியூகத்தை உருவாக்கி உள்ளார்கள்.

இந்த வியூகத்தின்படி, புரியாமல் எழுதுபவரும், இந்த மண்கருவில் தோன்றாதவருமான எழுத்தாளர் அசோகமித்திரனை அகாதெமியின் பொதுக்குழுவிற்கு உறுப்பினராக்க சகல முயற்சிகளையும் மேட்டுக்குடி வட்டாரங்கள் மேற்கொண்டு வருகிறது.

புதுடெல்லியில் சாகித்ய அகாதெமியின் வட்டாரங்களுக்குச் சென்றால் அங்குள்ள பிராமணியங்கள், 'அசோகமித்திரன், அசோகமித்திரன்' என்று லட்சார்ச்சனை செய்து வருகின்றன.

இப்போதைய கணிப்புப்படி அசோகமித்திரனை, பொதுக்குழு உறுப்பினராக்கி, அடுத்த தமிழ் ஆலோசனைக் குழுவில் இடம்பெறச் செய்து தமிழுக்கும், மக்கள் இலக்கியத்திற்கும் எதிராகத் திருப்பிவிட திட்டமிடப்பட்டுள்ளது.

சாகித்ய அகாதெமியின் தலைவருக்கும் செயலாளருக்கும் குடுமி பிடிக்காத குறையாகக் குழுப்போராட்டம் நடந்து வருகிறது. ஆனால், இந்த இருவரும் அசோகமித்திரனை அகாதெமிக்குள் கொண்டுவர வேண்டும் என்பதில் ஒத்த கருத்து உள்ளவர்களாம்.

ஏற்கெனவே, இவர்களுடைய தயவால் அசோகமித்திரன் கலந்து கொள்ளாத இலக்கிய அரங்குகள் ஏதுமில்லை. இவர் தமிழ் இலக்கியத்தின் பிதாமகனாக தூக்கிப் பிடிக்கப்படுகிறார். இதற்கு பிரபஞ்சன் உள்ளிட்ட சூத்திர எழுத்தாளர்கள் முட்டுக் கொடுக்கிறார்கள்.

இந்தக் குழுவிற்கு முன்பு ஜெயகாந்தன் உள்ளிட்டோரை உறுப்பினர்களாகக் கொண்ட குழு, அண்ணா ஒரு இலக்கியவாதி அல்ல என்று



படிப்பகம்

www.padippakam.com

அடித்துப்பேசி அவருக்கு இலக்கியத் தடம் தேவையில்லை என்று முடிவெடுத்தது. இந்த முடிவை. இப்போதைய குழுதான் மாற்றியது.

இந்தப் பின்னணியில், இனிமேல் வர இருக்கும் புதிய ஆலோசனைக் குழுவும், அகாதெமியின் பொதுக்குழுவிற்கு மத்திய அரசு சார்பில் நியமிக்கப்படும் எழுத்தாளர் உறுப்பினர்களும் முக்கியத்துவம் பெறுகிறார்கள்.

இப்போதைய கணிப்புப்படி பார்த்தால், வில்லத்தனமே அன்றி வேறல்ல. அசோகமித்திரன் மட்டும் அகாதெமியின் பொதுக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டு விட்டால் இந்த மண்ணின் கலாச்சாரத்தை வெறுக்கும் படைப்பாளிகளே மேலோங்குவார்கள். இதனால், இப்போதைய ஆலோசனைக் குழு திட்டமிட்டிருக்கும் தமிழர் அறிஞர்களைப் பற்றிய தகவல்கள், மூலையில் போடப்படும். மக்கள் வரிப்பணத்தில் இயங்கும் சாகித்ய அகாதெமியில், அசோகமித்திரன் வகையறாக்கள் இலக்கிய மஞ்சள் குளிக்கப் போகிறார்கள்.

வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல், தமிழ் இலக்கியத்தை நாலாந்திர இலக்கியம் என்று சொன்னவரும், பிராமணியக் பதாகைகளைத் தலையில் தாங்குபவரான எழுத்தாளர் பிரபஞ்சனைப் புதுவை அரசு தனது சார்பில் எதிர்வரும் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக நியமிக்கத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. அசோகமித்திரன் சொல்கிற இடத்தில் பிரபஞ்சன் தனக்கென்று ஒரு வசதி கிடைத்தால் எந்த இலக்கிய பாதகங்களையும் செய்யத் துணிந்தவர். சக சூத்திர எழுத்தாளர்களைக் காட்டிக் கொடுப்பவர். இவரும் அசோகமித்திரனும் சேர்ந்து விட்டால் இந்தச் சேர்க்கையே மக்கள் இலக்கியத்திற்கு எதிரான இரட்டைக்குழல் துப்பாக்கியாய் ஆகிவிடும். ஏற்கெனவே, மேட்டுக்குடியின் தயவில் சாகித்ய அகாதெமிக்கான தமிழ் நூலைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் இடம்பெற்று, அசோகமித்திரன் அடிவருடி ஒருவர் எழுதிய அற்பத்தனமான நூல் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதற்குக் காரணமாக இருந்தவர் இந்தப் பிரபஞ்சன். வாலை ஆட்டிக் கொண்டே குரைக்கின்ற இலக்கியவாதிகளுக்கு இவர் ஒரு முன்னுதாரணம்.

இந்த இருவரும் இடம்பெற்றால் 'உள்ளதும் போச்சு நொள்ளக்கண்ணா....' என்பதுமாதிரி ஏதோ ஓரளவுக்காவது மண்வாசனை இலக்கிய மேதைகளைத் தடங்காட்டும் இன்றைய அகாதெமிப் பணி இதற்கு நேர்எதிராக மாறும். இந்தக்குழு கோடிகாட்டும் பணிகளும் முடக்கி வைக்கப்படும். திராவிட இலக்கியத்தைக் குறிப்பாக, அதன் மக்கள் இலக்கியத்தை முன்னெடுத்துச் செல்லும் முயற்சி முறியடிக்கப்படும். அகாதெமியின் நடவடிக்கைகளில் மண்வாசனைப் படைப்பாளிகள் தடம் தெரியாமல் போய்விடுவார்கள். பத்து ஆண்டுகளுக்கு முன்பு, வெங்கடசாமிநாதன் என்பவர் சாகித்ய அகாதெமியின் சார்பில் தயாரித்த எழுத்தாளர் கலைக்களஞ்சியத்தில் நாடறிந்த தமிழ்ப் படைப்பாளிகள் இடம் பெறவில்லை.

எனவே, திராவிடப் படைப்பாளிகளுக்கு அகாதெமியில் இடம் கிடைக்கிறதோ இல்லையோ, இந்த அசோகமித்திரன் வகையறாக்கள் மீண்டும் ஆதிக்கம் செலுத்தப் போவதைத் தடுத்தாக வேண்டும். இவர்களுக்காக மத்திய அரசின் கல்வித்துறையில் உள்ள பண்பாட்டுத் துறையும், சாகித்ய அகாதெமியின் தலைமையும் வரிந்துகட்டி செயல்படத் தொடங்கியுள்ளது. இதனை அனுமதித்தால் சாத்தான்களே தமிழ் வேதத்தையும் ஓதுகிற நிலைமை ஏற்படும். நமது ஓதுவார்களுக்காவது கருவறைக்கு வெளியே ஒரு இடம் உள்ளது. இந்த ஆசாமிகள் அகாதெமிக்குள் புகுத்தப்பட்டால் ஓதுவார்கள் நிலைமையில் உள்ள மண்வாசனைப் படைப்பாளிகள் சாகித்ய அகாதெமியின் வளாகத்திற்குள்கூட நிற்கமுடியாது. இந்த அகாதெமிக்கு எப்படியோ இந்த ஆசாமிகள் வலுவான இலக்கியப் பூணூலைப் போட்டிருக்கிறார்கள். இதை அறுக்கவில்லையென்றாலும் கழற்றியாக வேண்டும். இல்லையானால் அகாதெமி நோக்கில் 'தமிழ்' வடமொழி மயமாகும். ஆங்கிலப் பாணியிலும், வடமொழிப் பாணியிலும் எழுதப்படும் எழுத்தே இலக்கியமாகிவிடும்.

எனவே, வருமுன் காக்கும் வகையில் அசோகமித்திரனை எந்தக் காரணத்தைக் கொண்டும் பொதுக்குழுவிலோ அல்லது ஆலோசனைக் குழுவிலோ நியமிக்கலாகாது என்று இலக்கிய சமூக நீதியில் அக்கறை கொண்ட தமிழ் இலக்கியப் படைப்பாளி களும் சிந்தனையாளர்களும் குரல் கொடுத்தாக வேண்டும். ஆகையால் தரமான மண்வாசனை இலக்கியத்தில் நம்பிக்கையுள்ள நாம் அனைவரும் அசோகமித்திரனை நியமிக்கக் கூடாது என்று அகாதெமியின் தலைமைக்குக் கீழ்கண்ட வகையில் கடிதம் மூலமாகவோ அல்லது தந்தி மூலமாகவோ தெரிவிக்க வேண்டும். அகாதெமியின் முகவரி இதுதான்.

The President / General Secretary,
Sahitya Academi,
Rabindra Bhavan,
35, Ferozeshah Road,
New Delhi - 110 001.

Please do not nominate, anti-tamil writer ASOKAMITRAN into the Academy as already the enough damage for the cause of modern tamil literature and its worthy writers.

இதேபோல், புதுவையில் உள்ள இலக்கியவாதிகளும், சமூகப் பொறுப்பாளர்களும் அந்த அரசிடம் இலக்கியப் பச்சோந்தியான பிரபஞ்சனுக்குப் பதிலாக அந்த மண்ணில் செழித்துக் கொழித்துக் கிடக்கும் அற்புதமான படைப்பாளிகளில் ஒருவரை அரசு சார்பில் நியமிக்க வேண்டும் என்று வாதாட வேண்டும். முடியாது போனால் போராட வேண்டும். இந்த இரு முயற்சிகளும் தமிழனுக்காகவும், தமிழுக்காகவும் மேற்கொள்ள வேண்டிய கட்டாயப் பணிகளாகும்.

– போராளி



படிப்பகம்

www.padippakam.com

# சிரித்தாலும் கண்ணீர் வரும்

கலை, இலக்கியம் யாவும் ஒரு சமுதாயத்தின் அந்தக் காலத்தின் உணர்ச்சிகளையும் தேவைகளையும் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும் என்று -விளக்கம் தரப் பட்ட காலம் ஒன்று இருந்தது.

1950-60 களில் தமிழ்த் திரைப் படங்களில் இந்த அம்சங்களையும் அலைகளையும் காண முடிந்தது.

அறிஞர் அண்ணா, கலைஞர், ஏ.பி. நாகராஜன், டி.கே.ஸ். சகோதரர்கள், கலைவாணர், சிவாஜி கணேசன், எம்ஜிஆர்., எஸ்எஸ்ஆர், எம்.ஆர்.ராதா, பாலையா, பீம்சிங், ஸ்ரீதர் உடுமலை நாராயணகவி, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், கண்ணதாசன், விஸ்வநாதன் - ராமமூர்த்தி, கே.வி. மகாதேவன், சுப்பையாநாயுடு, பத்மினி, சாவித்திரி, தேவிகா, சரோஜாதேவி, ஆரூர்தாஸ், கே.எஸ்.கோபால கிருஷ்ணன், ஏவி.எம், வாசன், டி.ஆர்.சுந்தரம், நேஷனல் பெருமாள் முதலியார்..... என்று தமிழ்த் திரைப்படங்களின் வளர்ச்சிக்கும் தமிழ்த்தேசிய உணர்வுக்கும் பெருமை சேர்த்த கலைஞர்கள் மக்களால் நேசிக்கப்பட்ட காலம் ஒன்று இருந்தது.

இவர்களிலே சிலர் தமிழர்கள் இல்லை என்றாலும் தமிழ் சினிமா, தமிழர்களின் உணர்வு சம்பந்தமானது என்கிற புரிதலுடன் இருந்தார்கள்.

இந்தப் பாரம்பரியத்தின் வாரிசுகளாக பாரதிராஜா, மகேந்திரன், இளையராஜா, என்று விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் கலை - இலக்கியம் பற்றிய ஞானமும் அக்கறையும் உள்ள கலைஞர்கள் தமிழ்த்திரைப்படங்களுக்கு ஒரு மரியாதை தேடித் தந்து கொண்டிருந்தார்கள்.

இந்த மாபெரும் கலைஞர்களின் படைப்பாற்றல் போற்றுதலுக்குரியதாக இருந்தாலும், இவர்களுடைய புதுமை மோகம் - அது போலியானது - தமிழ் சினிமாவின் பாதையையே மாற்றி விட்டது.

போலிப் புதுமையே வர்த்தகத்துக்குப் போதுமானது என்கிற





படிப்பகம்

www.padippakam.com



சீரழிவை நோக்கித் தமிழ்த் திரைப் படங்களை மலிவாக்கிய 'பெருமை' மணிரத்தினம், ஷங்கர், மற்றும் இந்த ரக இயக்குநர்களுக்கு உண்டு. (சேரன், பாலா, தங்கர்பச்சான் போன்ற இயக்குநர்கள் இந்தப் படு குழியிலிருந்து தமிழ் சினிமாவை வெளியே இழுப்பதற்குப் படாத பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்)

பாடல் காட்சிகளில் 'சுவை' கூட்டுவதாக எண்ணிப் பாரதிராஜா, காட்சிக்குத் தொடர்பில்லாத 'தேவதைகள்' சிலரை நுழைத்தார். இடையே கம்ப்யூட்டர் மூலம் 'மேலை உலகின் சத்தங்களை' அறிமுகம் செய்தார் இளையராஜா. பற்றிக் கொண்டது நெருப்பு. பிந்திய தலைமுறை அரைகுறை ஆடையணிந்த கவர்ச்சிக் கும்பலும், பொருள் புரியாத இரைச்சலும் இருந்தால்தான் காதல் காட்சி களிப்பூட்டும் என்கிற முடிவுக்கு வந்தது.

இப்போது? தமிழ்க் கலாச்சாரத்தை எவ்வளவு அழிக்க முடியுமோ அதுதான் வெற்றியின் பாதை என்று இளைய தலைமுறை இயக்குநர்கள் புறப்பட்டிருக்கிறார்கள்.

எந்த மொழியும் ஒழுங்காகத் தெரியாத மடையர்களும், எந்தப் பண்பாடும் இல்லாத கழிசண்டாளர்களும் தமிழ் சினிமாவுக்குள் படையெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஜென்டில்மேன், சிட்டிசன், ரன், ரெட், தில், ஏய் நீ ரொம்ப அழகா இருக்கே என்று தலைப்பில் தொடங்கி எல்லா அம்சங்களிலும் தமிழன் என்றொரு இனம் உண்டு என்கிற அடையாளத்தை முற்றிலும் அழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அம்மணமாய் நீலப்படம் எடுப்பதற்குத் தயாராக இருக்கும் இயக்குநர்கள், தயாரிப்பாளர்களின் பிடியிலே இன்று தமிழ் சினிமா தவித்துக் கொண்டிருக்கிறது.





படிப்பகம்

www.padippakam.com

இவர்களுக்குத் தேவை கவர்ச்சி காட்டி, கிளுகிளுப்பூட்டி, போதை ஏற்றி காசுபறிப்பதற்குத் தோதான சில உத்திகளும், கலை என்றால் மானுட நாகரிகத்தைக் கலைப்பது, மறை - திரை இல்லாமல் மேனியைக் களைவது என்று தெரிந்து கொண்டிருக்கிற இளம் நாயகிகளும் தான்.

ரத்தக் கண்ணீர் என்றொரு படம். காசுக்காக ஆளை மயக்குவது. காரியம் முடிந்ததும் தூக்கி எறிவது என்கிற நிலையிலுள்ள ஒரு கணிகையின் பாத்திரம். "ஆளை ஆளைப் பார்க்கிறார்..." என்று ஆடி மயக்கும் காட்சி. இங்கே மயக்குதல் என்பது விழிகளின் அசைவில் மாத்திரமே இருந்தது. உடையோ கழுத்து முதல் கால்வரை மூடப்பட்டிருக்கும்.

இன்றோ, கதாநாயகி என்பவள் களையாத உடையில்லை. மேனியில் காட்டாத இடமில்லை. ரயிலில் இறங்கி ஊருக்குள் வருவதற்குள் பத்து முறை நனைந்து கண்ட பயல்களுடன் ஆட்டம் போடுகிறாள். திடுமென்று ஒருநாள் காதலனிடம் கோபித்துக் கொள்







படிப்பகம்

www.padippakam.com



கிறாள். "என் இடுப்பைப் பார்த்தாயா?" என்று முற்றும் துறந்த போது வராத பெண்மை உணர்வு இடுப்பைப் பார்த்ததில்தான் வெடித்துக் கொண்டு வருகிறது. என்ன போக்கிரித்தனம்?

கடைசிக்கும் கடைசிப் பரிசிலனையில் தமிழ் சினிமா என்றால் பெண்களைத் துகிலுரிவது, கொக்கோக வித்தைகளுக்குக் கூட்டம் கூட்டுவது என்றாகி விட்டது.

அம்மணமாய்த் திரிவதற்கும் ஆபாசமாய் நெளிவதற்கும் தமிழ்ப் பெண்கள் கிடைக்கவில்லையா? வடக்கு எதற்கிருக்கிறது. இறக்குமதி செய்து கொள்ளலாம் என்று தயாரிப்பாளர்கள் உற்சாகம் கொள்கிறார்கள். இயக்குநர்கள் இளித்து நிற்கிறார்கள்.

அழகிய பெண்களின் திறந்த உடல்தான் சினிமாவின் கரு, உரு, உத்தி, உச்சாடனம் என்றாகி விட்ட போதிலும் எல்லாத் துறைகளிலும் ஏமாற்றப்படுவது போலவே சினிமாவிலும் பெண்கள்தாம் ஏமாற்றப்படுகிறார்கள். ஈவிரக்கமற்ற முறையில் சுரண்டப்படுகிறார்கள்.

சிவப்பு விளக்குப் பகுதிகளில் விபச்சாரத் தொழிலில் 'முதலீடு' செய்யப்பட்டு, உறக்கம் கெட்டு, உடம்பு கெட்டு பாழடிப்புக்காளாகும் பெண்கள், தரகர்கள் பெறும் ஊதியத்தில் பத்தில் ஒரு பங்கு கூடப் பெறுவதில்லை. சினிமாவிலும் அதுதான் நடக்கிறது.

இன்றைய தமிழ் சினிமா நிச்சயமாகக் கதாநாயகனை நம்பி இல்லை. கதாநாயகியை நக்குகிற ஒரு நாய் என்பதற்கு மேலாக நடிகனுக்கு இன்று எந்த முக்கியத்துவமும் இல்லை.

ஆனால் நடிகனுக்குச் சம்பளம் நான்கு கோடி என்றால் நாயகி பெறுவது சில இலட்சங்களே.

உழைப்புக்கும் (!) நியாயத்துக்கும் உண்மையான மதிப்புத் தருவதாக இருந்தால் சினிமாவில் ஆண்களுக்குத் தரப்படும் ஊதியத்தை விடப் பெண்களுக்குப் பல மடங்கு கூடுதலாகத் தரப்பட வேண்டும்.

மாவட்ட ஆட்சியர் (கலெக்டர்) பதவிகளில் ஆசிரியர் பதவிகளில் ஆண்களுக்கு ஒரு சம்பளம் பெண்களுக்கு அதில் பத்தில் ஒரு பங்கு சம்பளம் என்று பேதம் பிரித்துத் தரப்படுவதில்லை.

சினிமாவில் கதாநாயகனுக்குத் தரப்படும் சம்பளம் வேறு; கதாநாயகிக்குத் தரப்படும் சம்பளம் வேறு.

அண்மையில் ஒரு நடிகை தன்னை ஒப்பந்தம் செய்ய வந்த நிறுவனத்தாரிடம் -

"கதாநாயகன் யார்? அவருக்கு என்ன சம்பளம்? அவருக்குத் தரப்படும் சம்பளத்தில் பாதியாவது எனக்குத் தர வேண்டும். புதுமுகம் நடிக்கிறார்; அல்லது பெண்ணுக்கு முக்கியத்துவம் தரும் பாத்திரம் தருகிறோம் என்று சொல்லுங்கள் நீங்கள் முடிவு செய்திருக்கிற சம்பளத்தில் பாதி தந்தால் போதும் மன நிறைவோடு நடிக்கிறேன்" என்று சொன்னாராம்.

அந்த நடிகையின் உறுத்தலும், உணர்வும் பாராட்டத் தகுந்தவை. இந்த உறுத்தலும் உணர்வும் மற்ற நடிகைகளுக்கும் வரவேண்டாமா?

நடிகைகள், தங்களுடைய அழகை விற்றுத்தான் சினிமா வயிறு வளர்க்கிறது என்பதையும், இந்த வர்த்தகச் சூதாட்டத்தில் தொடர்ந்து தாங்கள் ஏமாற்றப்படுகிறோம் என்பதையும் உணர வேண்டும். நடிகர்களுக்குக் குறைந்த சம்பளம் வாங்குவதில்லை என்று முடிவு செய்ய வேண்டும்.

நடிகைகள் தங்களுடைய உரிமைக்காகப் போராடத் தொடங்கும்போது, அவர்களுடைய வருமானம் உயரும் என்பது மாத்திரமல்ல தமிழ் சினிமாவின் தரமும் உயரும் என்கிற சூட்சுமம் இதிலே அடங்கியிருக்கிறது.

தமிழ் சினிமாவின் தரத்தைக் காப்பாற்ற தோழியரே, உங்கள் உரிமைக்குக் குரல் கொடுங்கள். ●



படிப்பகம்

**வெளிநாட்டுத் தமிழர்களுக்கான ஏற்றுமதி நிறுவனம்**
**THAVAH IMPEX PVT LTD**
(இலங்கையிலும் இந்தியாவிலும் பதிவு பெற்ற நிறுவனம்)
புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்களுக்குத் தேவையான சகல பொருட்களையும் சென்னையிலிருந்து ஏற்றுமதி செய்கிறோம்.
TEL: 0091 - 44 - 4415796 FAX: 4402405 E-mail: thavahimpex@yahoo.com

## உங்கள் பார்வையில்

◆ நந்தனின் தீவிர வாசகன் நான். கடந்த மூன்று ஆண்டுகளாகத் தவறாமல் ஒரு வரி விடாமல் நந்தனை வாசித்து வருகிறேன். எனது வாழ்வில் உங்கள் இதழ் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. வைதீகக் குடும்பத்தவனாகிய என்னை நாத்திகனாக்கி விட்டது. தமிழும் சைவமும் என்றிருந்த என்னை, தமிழும் திராவிடமும் என்று பேச வைத்து விட்டது ஆனாரூனாவின் நெஞ்சின் அலைகள்.

**– பு.மயூரன், பிரான்சு.**

◆ கட்டறுத்துப் பீடு நடை போட்டுவரும் புரட்சி ஏடான நந்தனில் மேதின வரலாற்றை விரிவாக எழுதி எங்களை வியப்புறச் செய்து விட்டீர்கள். சின்னதொரு வருத்தம் எங்களுக்கு. கடந்த மூன்று இதழ்களாக 'கேள்வி - பதில்' பகுதி இடம் பெறவில்லையே ஏன்? மீண்டும் தொடர்ந்து கேள்வி - பதில் பகுதி வெளியிடுமாறு விரும்பிக் கேட்டுக் கொள்கிறோம்.

**– இளங்கோவன், கனகராஜ், மனோகரன், பழனியப்பன், வேல்முருகன், திருவானைக்காவல்.**

◆ நந்தனைத் தொடர்ந்து ஆர்வக் கிளர்ச்சியுடனும் ஆவல் மகிழ்ச்சியுடனும் படித்து வருகிறேன். சமுகப் பார்வையுடன் முற்போக்குச் சிந்தனைகளை நந்தன் எங்களுக்கு வழங்கி வருகிறது.

**– ரூபன் சிவராஜா, நோர்வே.**

◆ மே 12 இல் பிறந்த நாள் காணும் நந்தன் ஆசிரியருக்கு நல்வாழ்த்துக்கள். நாடு செழிக்கவும், நம் தமிழ் தழைக்கவும் தமிழன் நன்னிலை எய்தவும், இனத்தை மீட்டெடுக்கவும் ஆனாரூனா ஆண்டு பல வாழ அன்னைத் தமிழை வேண்டுகிறேன்.

**– சா.திருவேங்கடம், திருவண்ணாமலை.**

◆ சிவப்பியக்கத்தின் ஜீவநதி கட்டுரை சிறப்பாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளது. தொகுத்தளித்த தணிகைச்செல்வருக்கும் வெளியிட்ட நந்தனுக்கும் நன்றி.

**– பொ.செந்திலரசு, சே.பாப்பாரப்பட்டி.**

◆ சாணக்கியனிலிருந்து சங்கராச்சாரி வரை பார்ப்பனர்களால்




~~தமிழும் சைவமும்~~

**தமிழும் திராவிடமும்**

ஒன்றுபட முடிகிறது. நாம் ஏன் ஒன்றுபட முடியாது? ஒவ்வொரு தமிழனுக்கும் உணர்வூட்டிச் செயலூக்கம் பெற வைத்தார் எழுகதிர் அருகோ.

**– இரா.செல்வம், ஊற்றங்கரை.**

◆ பொடாவைப் பற்றிக் கவலைப்படாமல் தமிழனின் வீரம், பெருமை, அறிவு ஆகியவற்றை உலகுணர உரையாற்றிய பழ.நெடுமாறனுக்குப் பாராட்டுக்கள்.

**– இரா.கல்யாணசுந்தரம், அனுப்பானடி, மதுரை.**

◆ ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்படுவதற்கு முக்கிய காரணகர்த்தாவாகிய குஜராத் முதல்வரைக் கைது செய்ய வேண்டும் என்று ஒரு தீர்மானம் தமிழ்நாடு போடவில்லையே ஏன்?

**– புரட்சித்தாசன், நரசிங்கநல்லூர்.**

◆ எளிமையே உருவான ஓவியர் ஜெயராஜின் எதார்த்தமான பேட்டி எனது மனத்தை மிகவும் தொட்டுவிட்டது. பேரன் பேத்திகளைக் கண்டுவிட்ட இவர் மட்டும் தமது ஓவியங்களைப்போலவே இளமையோடு இருப்பது எப்படி?

**– மணவழகன், மதுரை – 9.**

◆ மாமேதை கார்ல்மார்க்ஸ் மனித குல மேம்பாட்டிற்குப் போராடிய நாட்கள், அவருடைய வாழ்க்கைச் சம்பவங்கள் எம் போன்ற மார்க்சியவாதிகளுக்குச் 'சிவப்பியக்கத்தின் ஜீவநதி' பயன் மிகுந்த கட்டுரையாகும்.

**– நெடுஞ்சேரி ப.உமாநாத், சென்னை–7.**

◆ சிறைக்குள் நந்தன் வருவதில்லை. சிறைப்பட்ட நாங்கள் சொந்த செலவில் வாங்கிப் படிக்கவும் அனுமதியில்லை.

**– உ.அன்புராசு, நடுவண்சிறை, சேலம்.**

◆ திருஞானசம்பந்தர் நாடகத்தை தொடர்ந்து நந்தனில் நான் தவிர்க்காமல் படித்து வருகிறேன். தமிழகத்தில் பரவிக் கிடந்த புத்த மதத்தை ஆரியர்கள் நாடு கடத்தி விட்ட சதிகளை ஆசிரியர் திருவாரூர் தங்கராசு மக்களுக்கு அம்பலப்படுத்தி வருகிறார். அவருக்கு எனது பாராட்டுக்கள்.

**– சக்தி சிவம், வீரபாண்டி.**



படிப்பகம்

www.padippakam.com

அச்சு என்பது கலை;
கலை உணர்ச்சி என்பது
மனிதனின் வான் தொடும் முயற்சி.

உங்கள் முயற்சியில்
நாங்கள் சிறகாகிறோம்.

**மாணவர் மறுதோன்றி அச்சகம்**

எண் 9, சுங்குராம் தெரு,
உயர்நீதிமன்றம் எதிரில்,
சென்னை - 600 001.
தொலைபேசி: 538 2513

கடை எண். 3 & 4, அபெக்ஸ் சேம்பர்
நாகேஷ் திரையரங்கம் அருகில்
தியாகராயர் சாலை,
பாண்டிபஜார், சென்னை - 600 017.
தொலைபேசி: 434 3862, 434 6580

"அடையாறு மாணவர் நகலகத்தின் அச்சகப் பிரிவு"

படிப்பகம்

www.padippakam.com

நந்தன் வழி - மாதமிருமுறை தநா/ தலைமை/ பி.எம்.ஜி-679/2002 • NANDAN VAZHI TAMIL FORTNIGHTLY
REGD. NO. TN/CHIF/PMG-679/2002 • WPP382 • REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA UNDER NO.68724/98


# ஆசிரியர் பிறந்த நாள் வெளியீடுகள்



புரட்சிக் கவிஞரின்

## தமிழியக்கம்

## காசி ஆனந்தன் கதைகள்

## ஆத்மா என்றொரு தெருப்பாடகன்

விவரங்களுக்கு

**மாணவர் புத்தகப் பண்ணை**
**26, ச.ப. சாலை, அடையாறு,**
**சென்னை - 600 020.**


படிப்பகம்